www.tamilarangam.net

# களத்தில்

*தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னதமான தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் திலீபன் செய்திருக்கிறான்.*

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

திருவள்ளுவர் ஆண்டு 2028 (24.09. 1997 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (144) அன்பளிப்பு: 60 p

நாசத்தை விளைவித்த
நெறிகெட்ட இந்தியத்தை
கூசவைத்து து ரத்த
குறிபார்த்து நின்ற எங்கள்
தேசத்தின் கண்மணியின்
தேகம் களைத்திருக்க......
பாசத்திற் கண் பனிக்கப்
பக்கத்தில் எம் தலைவன்

**தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் பத்தாம் ஆண்டு (15 . 09 . 97 - 26 . 09. 97) நினைவையொட்டிய கட்டுரை நடுப்பக்கத்தில்...**



## இராணுவக் காவலுடன் நின்ற கப்பல் சிறுத்தை அணியால் மூழ்கடிப்பு

### இந்த மண் எங்களின் சொந்த மண். இதனை விற்றுப் பிழைக்க அனுமதியோம்

தமிழீழக் கடற்பரப்பில் சிங்களக் கடற்படையினதும் இராணுவத்தினதும் காவலுடன் 'இல்மனைற்' கனிப்பொருள் மண்ணை ஏற்றிக்கொண்டிருந்த கப்பல் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் விசேட அதிரடிப் படைப் பிரிவான சிறுத்தைக் கொமாண்டோக்களாலும் கடற்புலிகளாலும் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது. மேற்படி கப்பலிலும் கடற்படைப் படகுகளிலும் பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்த சிறிலங்காப் படையினர் கடற்புலிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். உதவிக்கு விரைந்த 'டோரா' பீரங்கிப் படகுகளும் கடற்புலிகளால் தாக்கித் திருப்பி அனுப்பப்பட்டன. மூன்று கடற்படை யுத்தக் கலங்கள் தாக்கி அழிக்கப்பட்டதுடன், ஒரு கடற்படை யுத்தக்கலம்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## சுற்றுப்பாதையும் புலிகளால் தடுப்பு “ஜெயசிக்குறு” நடவடிக்கை தடுமாறுகிறது

சிறிலங்காப் படையினர் 25 ஆயிரம் ஆளணி நகர்வுடன் ஆரம்பித்த 'ஜெயசிக்குறு' நடவடிக்கை நான்கு மாதங்களாகியும் புளியங்குளம் வரை கூட முன்னேறமுடியாதவாறு விடுதலைப் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. கண்டிவீதி வழியாக முன்னேற முயன்று படுதோல்வியைத் தழுவிக் கொண்ட சிறிலங்காப் படைகள் பிரதான பாதையைக் கைவிட்டு ஒரு சுற்றுச் சுற்றி வடமேற்குப் பக்கமாக பூதூர் சென்று அங்கிருந்து புளியங்குளம் நோக்கி முன்னேற திட்டம் தீட்டின. இத்திட்டத்தின் பிரகாரம் பூதூர் வரை நகர்ந்திருந்த சிறிலங்காப் படையணியை ஊடறுத்துத் தாக்கி அழிக்கும் முயற்சியில் 11ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இறங்கினர். இதில் 40 படையினரைப் பலிகொடுத்த சிறிலங்காப் படை பழைய நிலை நோக்கி பூதூரை விட்டுப் பின்வாங்கிச் சென்றது. மீளவும் 15ஆம் திகதி பூதூர் நோக்கி நகர முயன்ற சிறிலங்காப்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## படை விலக்கல் ஒன்றே தீர்வுக்கான பாதையை திறக்கும்!

சமீபத்திய சம்பவங்கள் படை விலக்கலின் அவசியத்தை மேலும் உணர்த்தி நிற்கின்றன. சிறிலங்கா அரசாங்கம் தனது படைகளைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் மேல் திணிப்புகளையும் நெருக்குதல்களையும் அழிவுகளையும் மேற்கொண்டு வருவதற்கான சான்றுகள் அனுதினமும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இந் நிலையில் படை விலகலின் அவசியம் தமிழ் மக்களின் சமூக – பொருளாதார – அரசியற் தேவைகளைப் பொறுத்தவரை மிக முக்கியமான ஒன்றாக உள்ளது. இது சாத்தியமானால் மட்டுமே சமாதானத் தீர்வுக்கான பாதைகள் செம்மைப்படுத்தப்படும் என இலங்கைத் தீவின் நிலைமைகளை நேரடியாக அவதானித்து வரும் விமர்சகர்கள் ஏகோபித்த கருத்தை வெளியிடுகின்றனர்.

### முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் மீதும் நெருக்குதல்.

சிறிலங்கா அரசாங்கத்தின் யாழ்ப்பாண அதிபராக முன்பு

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## சிறுத்தைப் படையணியின் மற்றுமொரு சாதனை!

கட்டுக்கரைக்குளம் பகுதியில் இம்மாதம் 9ம் திகதி இரவு விடுதலைப் புலிகளின் சிறுத்தைப் படையணி மற்றுமொரு சாதனையினை நிகழ்த்தியுள்ளது.

சிறுத்தைப் படையணியின் கடற்சிறுத்தைகளினால் சிங்களப் படையின் ஏழு காவலரண்கள் கட்டுக்கரைக்குளம் பகுதியில் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன. இத்தாக்குதலில் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட ஏனையவர்கள் காயங்களுடன் தலைதெறிக்க ஓடித்தப்பித்துக் கொண்டனர். இவ் வெற்றிகரமான தாக்குதலில் விடுதலைப்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ். குடாநாட்டில் படையினரால் போதைப் பொருள் விநியோகம்

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டுப் பகுதியில், சிங்களப் படையினர், அபின், கஞ்சா மற்றும் வேறு சில போதைப் பொருட்களை மக்கள் மத்தியில் பெருமளவில் விநியோகித்து வருகின்றனர்.

தமிழ்ச் சமூகத்தைச் சீரழிக்கும் நடவடிக்கையில் ஓர் அங்கமாக இதனை வெகு அக்கறையுடன் சிறிலங்கா அரசின் மறைமுக அனுசரணையுடன் அதன் படை கச்சிதமாக நடாத்தி வருகிறது. தமிழ் மக்களின் அடிப்படைச் சமூக அமைப்பை சீரழிப்ப தற்கும், இளம் சந்ததியிடத்தே ஒழுக்கக்கேட்டை ஏற்படுத்தி, விடுதலை உணர்வை மழுங்கடி க்கவும் சிங்களப் படையினர் திட்டமிட்ட முறையில் இத னைப் புரிந்து வருகின்றனர்.

உடல் நலத்திற்கு பெரிதும் தீங்கு விளைவிக்கும் 'கசிப்பு' எனக் கூறப்படும் சாராயம் காய்ச்சுவோர் சிங்களப் படையால் ஊக்குவிக்கப்படுகின்றனர். இவ்விதம் 'கசிப்பு'க் காய்ச்சுவோர் குறித்து, இராணுவ அதிகாரிக ளிடம் முறைப்பாடு செய்த சில சமூகநலன் விரும்பிகள், இராணுவத்தால் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

யாழ். குடாநாட்டின் பல பாகங்களில் மதுபானக் கடை களின் எண்ணிக்கை பெரு மளவு அதிகரித்துள்ளது. பாட சாலைகள், ஆலயங்கள், போன்றவற்றின் சுற்றாடல் பகுதியில் இவ்வாறான மதுக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் மதுபானக் கடைகளின் பங்குதாரர்களாக, சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் உள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ✷

# கூலிக் குழுக்களின் அட்டகாசம்

சிங்களப் படைகளுடன் இயங் கும் கூலிக் குழுக்களின் அட்டகாசங்களை சொற்களில் வடிக்க இயலாது. சிலவேளை களில், கொலை – கொள்ளை செய்வதில் சிங்களப் படையை விட தாம் அதிதிறமைசாலிகள் என்ற விதத்தில் இவர்களின் நாசகார நடவடிக்கைகள் அமைகின்றன.

மட்டக்களப்பு கொம்மாந்து றையில், 'ராசிக் குழு' எனும் கும்பல், இரண்டு பொது மக்களை குரூரமாகக் கொன்று ள்ளது. கடந்த மாதம் இறுதி வாரம் நடந்த இச் சம்பவத்தில், கே. தருமன் என்பவரும், மேலும் ஒருவரும் பலியாகி யுள்ளனர். பொதுமக்களின் வீடுகளை உடைத்து, வானொ லி, தொலைக்காட்சி மற்றும் விலையுயர்ந்த பொருட்களை மேற்படி 'ராசிக் கும்பல்' இராணுவத்தினரின் பாவ னைக்காகக் கொள்ளையடித்த வேளை, அதனை மேற்படி இருவரும் கண்டுவிட்ட நிலை மிலேயே அவர்கள் அக்கும்பலின் வெறித்தனத்துக்கு பலியாகியு ள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு செங்கலடியில் சிங்களப் படை யுடன் இயங்கும் 'ரெலோ குழு', பெற்றோல், மண்ணெண்ணை, டீசல் போன்ற எரிபொருட்களை விற்பனை செய்யக்கூடாது என மக்களுக்கு எச்சரித்துள்ளது. சிங்கள இராணுவ அதிகாரிகள் இதுபற்றி தமக்கு தெரியாது போல் நடந்து கொண்டாலும், இவ்வாறாக விடயங்களை இக் குழுக்கள் மூலமே அவர்கள் நிறைவேற்றுவதுண்டு.

இது இவ்வாறிருக்க, மட்டக் களப்பு காத்தான்குடியில் முஸ்லீம் பொதுமக்களுக்குச் சொந்தமான 47 மீன்பிடிப் படகுகள், வலைகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் வேண்டுமென்று எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன. கடந்த 4ஆம் திகதி இரவு நடைபெற்ற இந் நாசவேலைக்கு, இராணு வத்துடன் சேர்ந்து இயங்கும் கூலிக்குழு ஒன்றே காரணம் என, சிறிலங்காவின் முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் தெரிவித்து ள்ளனர். ✷

# சிங்களப் படையின் கேலிக்கூத்துச் சட்டங்கள்

சிங்களப் படையின் ஆக்கிர மிப்பில் உள்ள யாழ். குடாநாட்டில் மக்களைத் தொல் லைக்குள்ளாக்கும் புதிய புதிய கேலிக்கூத்துச் சட்டங் களை சிங்களப் படை அறிவித்து வருகின்றது.

வடமராட்சியில், துவிச்சக்கர வண்டி வைத்திருப்பவர்களும் இராணுவ முகாம் சென்று பதிவு செய்ய வேண்டும் என, வடமராட்சி இராணுவத் தளபதி கட்டளையிட்டுள்ளார். முதலில், வடமராட்சியில் நான்கு சில் வண்டிகளே பதியப்படல் வேண்டும் என இராணுவம் அறிவித்திருந்தது. வலிகாமம் மேற்குப் பகுதியிலும் இவ் வாறான கெடுபிடிகள் நடை பெறுகின்றன. அளவெட்டி இராணுவ முகாம் அதிகாரி, உழவு இயந்திர உரிமை யாளர்களுக்கான கட்டளை ஒன்றை பிறப்பித்துள்ளார். உழவு இயந்திரங்களைத் தினமும் மாலை முகாமிற்குக் கொண்டு செல்ல வேண்டும் எனவும், அங்கேயே இரவு முழுவதும் நிறுத்தி வைக்கப்படல் வேண்டும் எனவும் தெரிவித்து ள்ளார்.

இது இவ்வாறிருக்க தென்மரா ட்சிப் பகுதியில் விவசாயிகளின் பக்கம் இராணுவத்தின் பார்வை திரும்பியுள்ளது. விவசாயம் மீது கடும் கெடுபிடிகளை இராணுவம் கடைப்பிடித்து வருகிறது. வரணி, இடைக்குறிச்சி, கரம்பைக்குஞ்சி, நாவற்காடு போன்ற பகுதிகளில் உழவு இயந்திரங்கள் பாவிப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பிற விவசாய உபகர ணங்கள் மற்றும் பிறதேவைகள் மீது கடுமையான கெடுபிடி உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டு ள்ளன.

தமிழ் மக்களின் வாழ்நிலையை ஒட்டுமொத்தமாக வறுமைக் கோட்டிற்குக் கொண்டுவந்து பின்னர், அவர்களுக்கு நிவார ணம் வழங்கித் தான் காப்பாற்று வதாக உலகிற்குக் காட்டு வதும், அவர்களை நலிந்த சமூகமாக வைத்திருப்பதுமே சிறிலங்கா அரசின் நயவஞ் சகமான திட்டமாகும். இதன் அடிப்படையிலேயே இவ்வாறான நடவடிக்கைகள் சிறிலங்கா அரசால் தன் படைகள் மூலம் நடாத்தப்படுகின்றன. ✷

# விரக்தியின் மத்தியில் குடாநாட்டில் சிங்களப் படையினர்

யாழ். குடாநாட்டில் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள சிங்களப் படையினர் விரக்திக்கு மத்தியில் உயிர்வாழ்வதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் தாக்குத லினால் தினசரி அச்சத்தில் வாழும் சிங்களப் படையினர், கடல்வழிப் பாதைகள் மீது விடுதலைப் புலிகளின் தாக்குதல் அதிகரித்துவரும் இவ்வேளை யில், விமானப்படை மீது மீண்டும் விடுதலைப் புலிகள் தொடர் தாக்குதலை மேற் கொண்டால் தாம் தனிமைப் படுத்தப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தில் மூழ்கியுள்ளதாக யாழ். சென்று திரும்பிய கொழும்புப் பத்திரிகை நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டுச் சிங்களப் படையினர் நிலை இவ்வா றிருக்க, சிங்கள அரசு ஆரம்பித்துள்ள 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கை முடியும் வரை தென்தமிழீழத்தில் அரச சார்பற்ற பொதுநிறுவனங்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபடக் கூடாதென மட்டக்களப்பு இராணுவ அதிகாரிகளால் சகல தொண்டர் நிறுவனங்களுக்கும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமது இராணுவ நடவடிக் கையைத் திட்டமிட்டபடி நிறைவேற்ற முடியாத இராணு வம், பொதுமக்களைப் பழிவா ங்கும் நோக்குடன் இவ்வாறு செயற்படுகின்றது. ✷

# பிள்ளைகளை போராட்டத்தில் இணைக்கும் பெற்றோர்

அடக்குமுறையாளனின் கொடுமை தாங்காமல், உணர்வு கொண்டவர்களாக தற்போதைய தமிழீழப் பெற்றோர்கள் காணப் படுகின்றனர்.

வன்னியில் நடந்த புதிய போரா ளிகள் இணைந்துகொள்ளும் உணர்வுபூர்வமான நிகழ்வில், தமது பிள்ளைகளைத் தாங்க ளாகவே போராட்டத்தில் இணைத்துக் கொள்ளும் பெற்றோரின் பங்களிப்பு அங்கு கூடியிருந்தோரை உணர்ச்சி கொள்ள வைத்தது. அண்மை யில் வன்னியில் நடைபெற்ற இவ் வைபவத்தில், முல்லை த்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். புதிய போராளிகளின் பெற்றோர் தமது பிள்ளைகளைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ள தமது பிள்ளைகளுடன் வந்திருந்தனர்.

இங்கு உரையாற்றிய ஓர் இளம் போராளி ஒருவரின் தந்தை, சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் எமது மக்களை தாம் நினைத்தபடி அழிக்கின்றனர். எங்களை நாங்களே பாது காத்துக் கொள்ள நாம் போராடியே தீரவேண்டும் என வலியுறுத்தினார். ✷

# படையினரின் கோரத்தனம் பாதிரியார் வெட்டிக் கொலை

தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த பாதிரியார் ஒருவர், சிங்களப் படையினரால் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்ட கோரச் சம்பவம், கிளிநொச்சி முறிப்பு எனும் இடத்தில் இடம் பெற்றுள்ளது. பாதிரியார் அருட் பாலன் (42) என்பவரே இப்படுகொலைக்கு உள்ளான வராவார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு இருப்பிடம் அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவை யை உணர்ந்து அதற்கு உடனடித் தேவையான கிடுகு களை சிலருடன் சேகரிக்கச் சென்ற இவர், கடந்த மாதம் 25ஆம் திகதியில் இருந்து காணாமல் போயுள்ளார். பின்னர் வெட்டுக்காயங்களுடன் மிகவும் பழுதடைந்த நிலையில் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

# கோவில் தொண்டர் படுகாயம்

தொண்டைமனாறு செல்வச் சந்நிதியில், சிங்கள இராணுவம் புதைத்து வைத்த நிலக் கண்ணி வெடித்ததில், பொது மகன் ஒருவர் படுகாய மடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதி க்கப்பட்டுள்ளார். கோவில் தொண்டரான கந்தையா பேரம்பலம் என்ற மேற்படி பொதுமகன், கோவில் வளவைக் கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்த வேளையே கண்ணிவெடியில் சிக்கியுள்ளார். ✷

# இளைஞனின் தலையைத் துண்டித்த இராணுவம்

மட்டக்களப்பு சித்தாண்டியில், சிங்கள இராணுவப் பயங்கர வாதிகளால், தமிழ்ப் பொதுமகன் ஒருவர் தலை துண்டிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். சித்தாண்டியைச் சேர்ந்த 26 வயதுடைய இரண்டு பிள்ளைக ளின் தந்தையான எஸ். சின்னத்துரை என்ற பொதுமகனே இக் கோரக்கொலைக்கு உள்ளாகியு ள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வீதி ரோந்து சென்ற சிங்கள இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மேற்படி பொதுமகன், சில நாட்களாக இராணுவ முகாமில் வைத்து பல சித்திரவதைகளிற்கு உள்ளாக் கப்பட்டுள்ளார். இவரின் நிலையை அறிய முகாமுக்குச் சென்ற குடும்பத்தினரிடம் தமக்கு இவர்பற்றி ஒன்றும் தெரியாது என இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர். இது நடைபெற்று சில தினங்களின் பின்னர், முகாமுக்கு 200 மீற்றர் தொலைவில் தலையற்ற சடலமாக அவர் மீட்கப்பட்டுள்ளார். ✷

# குடும்பப் பெண் சுட்டுக் கொலை

யாழ். குடாநாட்டில், 56 வயதுடைய குடும்பப் பெண் ஒருவர் சிங்களப் படையால் கொலை செய்யப்பட்டுள்ளார். மானிப்பாய் சங்குவெளியை கடந்த மாதம் 26ஆம் திகதி, திடீரெனச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று சோதனை நடாத்தினர். விசிங்கம் செல்ல முத்து (56) எனும் இப் பெண், இராணுவ உத்தரவுக்கு இணங்க வீட்டை விட்டு வெளியே வந்தபோதும், சற்று தாமதமாக வெளியே வந்ததால், அவ்விட த்திலேயே இராணுவத்தால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். ✷

www.tamilarangam.net



# திலீபன் தந்த எழுச்சி

'மக்கள் புரட்சி வெடிக்கட்டும், தமிழீழம் மலரட்டும்' என லெப்.கேணல் திலீபன் தனது இறுதியாசையைத் தெரிவித்து பத்தாண்டுகள் முடிந்துவிட்டன.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம், இனவெறி கொண்ட பேரினவாதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் நரித்தனத்தால் உருவாக்கப்பட்ட இந்திய – சிறிலங்கா ஒப்பந்தம் என்ற தடைக்கல்லால் தனது முதலாவது அத்தியாயத்தை முடிந்திருந்த நேரம். இந்தியா எல்லாவற்றையும் தீர்த்து வைக்கும் என்ற மாயை உணர்வை உரப்படுத்தி தமிழீழச் சிந்தனையை சிதைத்திட சிறிலங்கா துடித்தது. இந்த மாயை உணர்வின் போலித்தனத்தை அம்பலமாக்கிட, தன் இன்னுயிரையே சாத்வீக வழியில் சமர்ப்பணம் செய்த தியாகி திலீபன், தன் மரணத்தால் 'தீர்வுக்கு' எனக் கூறப்பட்ட ஒப்பந்தத்தின் பின் உள்ள சதியை நிரூபித்து மக்கள் மீண்டும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈழப்போர் இரண்டு எனும் அத்தியாயத்தை ஆரம்பிக்க வைத்தான்.

இந்த ஈழப்போர் இரண்டு, திலீபன் தந்த எழுச்சியுடன் மக்கள் புரட்சியாகப் பரிணமித்து பெரும்பாலான தமிழீழப் பிரதேசங்கள் மீட்கப்படவும், நூற்றாண்டுகளாக அந்நியர் இருந்த யாழ். கோட்டையை தமிழர் படை கைப்பற்றி, யாழ். குடாநாட்டை மையமாக் கொண்ட தமிழீழத் தேச நிர்வாகம் ஒன்று மீள அமைக்கப்படவும் வழி செய்தது. தமிழீழ தேசத்தின் உண்மை இறைமை, விடுதலைப் புலிகளிடமும் பெயரளவு இறைமை மட்டும் அந்நிய அரசான சிறிலங்காவிடம் இருப்பதை உலகு இனங்காணத் தொடங்கியது.

'விடுதலைப் புலிகளுக்கு சீருடைப் படை உண்டு. செம்மையான நிர்வாகம் உண்டு. தேசமக்களாக தமிழீழ மக்கள் உள்ளனர். சர்வதேச அங்கீகாரம் ஒன்று மட்டுமே இல்லை' என சர்வதேச தந்திரோபாய விபர அறிக்கையே சுட்டிக்காட்டும் அளவுக்கு திலீபனின் இலட்சிய வேட்கை மக்கள் மத்தியில் உணர்வை ஏற்படுத்தியது.

இந்நிலையில், தமிழீழத் தேசத்தின் குடிகளான தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் தனிமைப்படுத்துதல் – தமிழீழத் தேசத்தின் வளங்களை அழித்து, தமிழீழத் தேச நிர்வாகம் மீளவும் செயற்படுவதைத் தடுத்தல் – இதன் மூலம் தமிழீழ தேசம், சர்வதேச அங்கீகாரம் பெற்று உருவாகுவதை முறியடித்தல் என்ற உள்நோக்கோடு சந்திரிகா பேச்சுவார்த்தைக்கான ஆயத்த முயற்சிகள் என சதிவலை விரித்தார். மீளவும் சந்திரிகாவால் எல்லாமே தீர்க்கப்படும் என்ற மாயை முளைவிட்டது.

இம்மாயை பல நாட்கள் நீடிக்கவில்லை. பேரினவாத சிங்கள அரசின் வழமையான கபட நாடகங்கள் – இழுத்தடிப்புகள் தொடர, இரு தரப்புக்கும் மோதல் தவிர்ப்பு ஏற்படுத்தப்பட்டு, அதனைக் கண்காணிக்க வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழு கூட வரவழைக்கப்பட்டது. இருப்பினும், என்ன பயன். சிங்களப் படைகள், உத்தியோகபூர்வ பதிவின்படி 200க்கும் அதிகமான மோதல்தவிர்ப்பு மீறல்களில் ஈடுபட்டன. சில போராளிகளின் இறப்பிற்கும் இவை காரணமாயின.

இதன் காரணமாக சந்திரிகா தீர்வு தருவார் என்ற மாயை மக்கள் மத்தியில் அடியோடு கலைந்து, ஈழப்போர் மூன்று ஆரம்பமாகியது. ஈழப்போர் மூன்றில், தமிழ் மக்கள், சிங்கள அரசின் தலைமையை நிராகரித்து புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களை நோக்கி பாரிய அளவில் இடம்பெயர்ந்து, தமிழீழ விடுதலைப் போராட்டம் – மக்கட் புரட்சியே என்பதை நிரூபித்தனர்.

அந்தப் பாரிய இடப்பெயர்வு பூர்த்தியடையாதவாறு தனது ஆக்கிரமிப்பின் மூலம் தடுத்த சிறிலங்கா, யாழ். குடாநாட்டுக்குள் அவர்களை திறந்தவெளிக் கைதிகளாக்கியது. ஆயிரக்கணக்கில் மக்களின் வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கி, அக் கற்களினால் குடாநாட்டை மூன்று பிரிவாக கூறுபோட்டு, இராணுவ வேலிகள் அமைத்து அங்கு இலட்சக்கணக்கில் மிதிவெடிகளை விதைத்து வைத்துள்ளது. அங்கிருந்தபடியே, சிங்களப் படைகள் மக்கள் மீதான கொடுமைகளை, வெளிஉலகிற்கு இலகுவில் செல்லாதவாறு செயற்படுகின்றன. இவை அனைத்தும் ஒரே ஒரு காரணத்திற்காகவே செய்யப்படுகின்றன. இம் மக்கள் தமிழர்கள். அதுவே காரணம். இவ்வளவையும் தன் படைகள் மூலம் நடாத்திக் கொண்டு, 'சமாதானத்திற்கான போர்' என சிங்கள அரசு பிதற்றுகிறது.

ஆகவே, திலீபன் கூறுவதுபோல், மக்கள் புரட்சி வலிமை அடைவதன் மூலம் மட்டுமே – இன்றைய சந்திரிகா மாயையின் உண்மைத் தோற்றம், உலகிற்கு அம்பலமாக்கப்பட்டு, தமிழ் மக்கள் சிங்கள அரசின் அரக்கத்தனமான அரசியலில் இருந்து விடுபடுவர்.

மக்கள் புரட்சி வலிமை பெறுவதற்கு, தமிழீழத் தேசத்தின் ஒவ்வொரு குடிமகனும், அவன் உலகில் எங்கிருந்தாலும் தன்னால் இயன்றதை உடனே செய்தல் வேண்டும். இதுவே பரிபூரணமாக கிளர்ந்தெழுங்கள் எனும் அத் தியாகதீபத்தின் அழைப்பின் அர்த்தமாக இருக்கும். □

# அபகரிப்பு

**புல்மோட்டைக் கடற்பரப்பில் சீன வர்த்தகக் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக தமிழீழத்திலிருந்து வெளிவரும் 'ஈழநாதம்' பத்திரிகையில் 12.09.97 அன்று இடம்பெற்ற ஆசிரியர் தலையங்கம்.**

புல்மோட்டையில் இல்மினைட் ஏற்றிக் கொண்டிருந்த கப்பல் ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. இக்கப்பல் தாக்கப்பட்டதற்கான காரணத்தையும் நியாயப் பாட்டையும் வலியுறுத்தியுள்ளது. 'தரையிலும் கடலிலுமாகத் தமிழர் தாயகத்தில் கடும் போர் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இப்போர்ச் சூழலில் எமது தாயக மண்ணின் வளங்களை அபகரித்துச் செல்வதை அனுமதிக்கமுடியாது. எமது தேசத்தின் பாதுகாப்புக்காக, எமது இனத்தின் நலனுக்காக நாம் சில போர் நடவடிக்கைகளை எடுப்பது தவிர்க்க முடியாதது'. எனத் தெரிவித்துள்ளது விடுதலைப் புலிகளின் அறிக்கை. 'எமது நடவடிக்கையானது உலக வர்த்தக நிறுவனங்களுக்கோ அன்றி சர்வதேச கப்பல் சேவைக்கோ எதிரானது அல்ல. எமது தேசத்தின் வளங்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கும், தமிழீழத் தேசத்துக்கு எதிரான சிறீலங்கா அரசின் போர்த்திட்டங்களை முறியடிப்பதற்குமே நாம் தாக்குதலை மேற்கொண்டோம்' எனவும் தெரிவிக்கின்றது. இலங்கையில் வடக்கு–கிழக்கு தமிழ் மக்களின் தாயகபூமியாகும். அம்மண்ணும் அதன் வளங்களும் அம்மக்களுடையதே. இம்மண்ணை ஆக்கிரமிக்க முற்படுகின்ற சிங்கள அரசுக்கு எதிராக தமிழ்மக்கள் இரத்தம் சிந்திப் பெரும் போர் ஒன்றை நடாத்திக் கொண்டு இருக்கின்றார்கள். இந்த நிலையில் தமிழ்மக்கள் தாயக மண்ணில் இருந்து அவர்கள் சம்மதம் இன்றி எடுக்கப்படும் வளங்கள் எவையும் ஒரு வகையில் களவுகளாகவே கொள்ளப்படும். இந்த வகையில் புல்மோட்டைக் கரையோரத்தில் அள்ளப்படும் இல்மினைட் கனிமவளமும் சிங்கள ஆட்சியாளர்களால் தமிழர் தாயகத்தில் இருந்து அபகரிக்கப்படும் ஒன்றேயாகும். ஆனால், தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தைத் தலைமை தாங்கி நடாத்திவரும் விடுதலைப் புலிகள் இயக்கம் அதனைத் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது சரியானதேயாகும். ஆனால், சிறீலங்கா அரசாங்கமோ இதனை வெளிநாட்டுக் கப்பல்கள் மீதான தாக்குதல் எனப் பிரச்சாரம் செய்கிறது. மற்றுமொரு வெளிநாட்டுக்கப்பல்மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியதாகப் பிரச்சாரம் செய்ததோடு வெளிநாட்டு மாலுமிகள் பாதிக்கப்பட்டது குறித்தும் முதன்மைப்படுத்தியது. ஆனால், எந்தவகையிலும் இது ஏற்றுக் கொள்ளமுடியாத ஒரு விளக்கமேயாகும். ஏனெனில், ஒருபுறம் தமிழ்மக்களுக்கு உரித்தான வளங்களை சிறீலங்கா அரசு அபகரித்து விற்பனை செய்ய முனைவதை அனுமதிக்க முடியாது. ஒருவகையில் இது திருட்டுப் போன்ற நடவடிக்கையாகும். மறுபுறம் அதே வளங்களை விற்றுத் தமிழ் மக்களுக்கு எதிராக அதேநிதியில் யுத்தத்தை நடத்தவும் சிங்கள அரசு முனைகிறது. ஆகையினால், இவ்வர்த்தகத்தை தமிழ் மக்கள் எந்த வகையிலும் அனுமதிக்க இயலாது. இதுதவிர இல்மினைட் ஏற்றிய கப்பல் மீது நடந்த தாக்குதலின் போது சில சீன மாலுமிகள் பாதிக்கப்பட்டது கவலை அளித்துள்ள ஒரு விடயம்தான். ஆயினும், இது தவிர்க்க முடியாத ஒரு அம்சமாகவே இடம்பெற்றுள்ளது. எவ்வாறாயினும் சீனக்கப்பலானது முழுமையான இராணுவப் பாதுகாப்புடனேயே இல்மினைட் ஏற்றும் பணியில் ஈடுபட்டு இருந்தது. இந்த நிலையில் இதனைத் தடுத்து நிறுத்தச் செய்வதாயின் ஆயுதப்பிரயோகம் தவிர்க்க முடியாததேயாகும். இவ்வாறு பார்க்கையில் இக்கப்பலானது தனித்துவமான ஒரு வியாபாரக் கப்பல் என்று நோக்க முடியாததொன்றாகவே இருந்துள்ளது. ஒருபுறம் சிறீலங்கா கடற்படைப் பாதுகாப்பு அணி அதன் கூடச் சென்ற அதேவேளை அதன் மேற்தளத்தில் இராணுவத்தின் பாதுகாப்பும் இருந்துள்ளது. இந்நிலையில் இதனை முழுமையாக சர்வதேச விதிகளுக்கு உட்பட்ட சரக்குக்கப்பலாகக் கொள்வது இயலாத ஒன்றாகும். ஒருவகையில் சிறீலங்காவின் வள அபகரிப்பு நடவடிக்கைக்கு உடந்தையாக இக்கப்பல் கம்பனி செயல்பட்டது என்று கூறலாம். இந்த நிலையில் இக்கப்பல் மீதான தாக்குதல் தவிர்க்க முடியாது போனது போல் அதில் வெளிநாட்டவரின் இழப்பும் தவிர்க்க முடியாது போயுள்ளது. ஆனால், இச்சம்பவமானது ஒரு கப்பல் மீதான தாக்குதல் எனக் கொள்ளப்படுவது தவறானதாகும். இது தமிழ் மக்களின் உடமைகளை, வளங்களை அபகரிப்பதற்கு எதிரான தாக்குதலாகும். இதனை சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும் கப்பல் கம்பனிகள் புரிந்து கொண்டு சிறீலங்கா அரசுடன் இவ்வாறான வர்த்தகத்தில் ஈடுபடாது இருத்தல் பொருத்தமானதாகும். □

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **20- 10 - 1997** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# மாவீரர்நாள் 1997 - பிரான்ஸ்

**ஓவியம் - பேச்சு - சிறுகதை / கவிதை - பாட்டுத்திறன் போட்டிகள்**

*1997 - மாவீரர் நாளை முன்னிட்டு பேச்சு, ஓவியம், பாட்டுத்திறன், சிறுகதை / கவிதை போன்ற போட்டிகள் எம்மால் நடாத்தப்படவுள்ளன. போட்டிகளில் முதலிடத்தைப் பெறும் போட்டியாளர்களுக்கு மாவீரர் நினைவு தங்கப் பதக்கம் வழங்கப்படுவதுடன், தரமான ஆக்கங்கள் 'மாவீரர் சிறப்பிதழ் - 1997' மலரிலும் இடம்பெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.*

**விண்ணப்ப முடிவு திகதி - 30 . 09 . 1997**

விண்ணப்பப்படிவங்களுக்கும், மேலதிக விபரங்களுக்கும்
தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ்
☎ 0143581142


# படை விலக்கல் ஒன்றே......

கடமையாற்றிய திரு. செல்லையா பத்மநாதனை சிங்களப் படைகள் கைது செய்து கொழும்பில் நாலாவது மாடியில் வைத்து விசாரித்து வருவது அனைவரும் அறிந்ததே. தற்பொழுது இவரை வெற்றுத் தாளில் கையெழுத்திடுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் வற்புறுத்தி வருவதாக அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். சிறிலங்காவின் முன்னாள் யாழ் அரசாங்க அதிபர், பொதுப்பணத்தை தவறான முறையில் கையாண்டதாகவும், விடுதலைப் புலிகளிற்கு அரச பணத்தை நிதியாக வழங்கியதாகவும் அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. தற்போது வெற்றுத் தாள்களில் அவரைக் கையொப்பம் இட வைப்பதன் மூலம் தமக்கேற்ற வாக்கு மூலங்களை சோடிப்பதற்கு சிறிலங்கா பகீரத பிரயத்தனம் செய்து வருகின்றது.

யாழ்ப்பாண அரச அதிபராக இருந்த ஒருவர் மீது இவ்வாறு அழுத்தங்களை பிரயோகிக்கும் சிறிலங்கா அரசு சாதாரண தமிழ்ப் பொதுமக்களை எப்படி ஆயுத நெருக்கடிகளிற்கு உள்ளாக்கி அவர்களின் அரசியற் பணிவை பெற முயல்கின்றது என்பது நிதர்சனமாகும்.

## பொதுமக்கள் மீதான இனப்படுகொலைகள்

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் நிலைகொண்டிருக்கும் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தின் சுற்றிவளைப்பின் போது கைதுசெய்யப்பட்டு இராணுவ முகாம் கொண்டு செல்லப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையான சித்தாண்டியைச் சேர்ந்த எஸ் சின்னத்துரை என்பவர் உயிரற்ற சடலமாக, இராணுவ முகாமிலிருந்து 200 யார் தொலைவில் வைத்து மீட்கப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மேலும் மானிப்பாயில் சங்குவெளியைச் சேர்ந்த 56 வயதான வீரசிங்கம் செல்லமுத்து எனும் தமிழ்த்தாய் ஒருவர் இராணுவ சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீட்டை விட்டு வெளியேற தாமதித்த காரணத்தினால் சிங்கள இராணுவ வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவ்வாறு அனுதினமும் இனக்கொலைகளையும் இனத் துன்புறுத்தல் களையும் நடாத்தி வரும் சிறிலங்கா இராணுவம் அண்மையில் மட்டக்களப்பில் ஐந்து கிராமசேவகர்களை கைது செய்தும், மட்டக்களப்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் வைரமுத்து திவாகரனை இரண்டாம் முறையாக காரணமேதுமின்றி கைது செய்தும் பல்வேறு விதமான தொல்லைகளைக் கொடுத்து வருகின்றது.

தீர்வுப்பொதியினையும், அது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு அறிவிப்பினையும் சிறிலங்காவின் பேரினவாத அரசியல் அமைப்புக்கு சாதகமான வகையில் முன்னெடுக்கப்படும் – சர்வதேச சமூகத்தினை ஏமாற்றும் கண்துடைப்பு முயற்சியாகவே அரசியல் அவதானிகள் நோக்குகின்றனர். ◆

# இராணுவக் காவலுடன் நின்ற கப்பல்.......

சேதம் ஏதுமின்றி விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. ஆர். பி. ஜிகள் இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட சிறிலங்காக் கடற்படைக்குச் சொந்தமான யுத்தத் தளபாடங்களும் பிற ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இந்த வெற்றித் தாக்குதலில் சிறுத்தைப் படைப் பிரிவிற்கோ கடற்புலிகளுக்கோ எதுவித இழப்பும் ஏற்படாமை குறிப்பிடத்தக்கது. திறமையான திட்டமிடலும் செயற்பாடும் இந்த இழப்பில்லா பெருவெற்றிக்குக் காரணமாக அமைந்தன.

இத்தாக்குதலில், பத்துக் கடற் படையினரையும் ஐந்து இராணுவத் தினரையும் சிறிலங்கா தரப்பு இழந்தது. இவர்களில் நால்வரின் உடல்கள் கடற்புலிகளால் எடுத்துச்செல்லப்பட்டன. மூழ்கடிக்கப்பட்ட கப்பல் 34,000 தொன் எடையுள்ளதெனவும் 17 மில்லியன் அமெரிக்க டாலர்கள் பெறுமதி யுள்ளதெனவும் அறியப்படுகின்றது. இத்தாக்குதல் தொடர்பான விபரமான அறிக்கை ஒன்று விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டது. அதில், "கனிப்பொருள் வளங்கள் நிறைந்த புல்மோட்டையானது தமிழீழ எல்லைக்குள் உள்ள பிரதேசமாகும். தமிழர் தாயகத்துக்குச் சொந்தமான இந்த மண்ணை வெட்டியெடுத்து, அதிக விலைக்கு விற்றுப் பிழைக்கும் சிறிலங்கா, அந்தப் பணத்தைக்கொண்டு ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் வாங்கி, தமிழ் மக்களை அழித்து வருகின்றது. இந்த அநீதி தொடர்வதை அனுமதிக்க முடியாது. இந்தச் சூழ்நிலைகளின் பின்னணியிலேயே மண் ஏற்றிக் கொண்டிருந்த கப்பலை, தாக்கி அழித்தோம். சர்வதேச வர்த்தகத்தை அல்லது கப்பல்களை அழிக்கவேண்டும் எனும் நோக்கிலோ அல்லது ஒரு குறித்த வர்த்தகத்தையோ அன்றேல் கப்பல் நிறுவனத்தையோ தாக்கவேண்டும் எனும் நோக்கிலோ இவை இடம்பெறவில்லை. எங்கள் சொந்த மண்ணை அகழ்வதையும், எங்கள் மூலவளங்களை விற்பதையும் தடுப்பதற்காகவும் சிறிலங்கா அரசின் யுத்த தந்திரோபாயத்தை முறியடிப்பதற்காகவுமே இந்த நடவடி க்கை எடுக்கப்பட்டது.

இதேபோன்று, முன்னொரு தடவையும் இதேபிரதேசத்தில் கனிவள மண்ணை ஏற்றிக்கொண்டிருந்த கப்பல் ஒன்றும் தாக்கப்பட்டமை உலகுக்கு நன்கு தெரியும். சிறிலங்கா அரசு எங்கள் எச்சரிக்கை எதையுமே பொருட்படுத்த வில்லை. மாறாக இராணுவக் காவலுடன் இத்தகைய அபகரிப்புச் செயல்களை தொடர்ந்தது. இந்தச் சரக்குக் கப்பலினைச் சுற்றி கடற்படையினரின் அதிவேக தாக்குதல் படகுகளும் 'டோரா' பீரங்கிப் படகுகளும் நின்றன. அத்துடன், கப்பலின் மேற்தட்டிலும் படையினர் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர். இந்தப் படை வியூகத்தை உடைத்துக்கொண்டே கப்பல் மேற்தளத்தை அடைந்தோம். அப்பொழுது நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் சில வெளிநாட்டு – உள்நாட்டுக் கப்பல் ஊழியர்களும் இறந்துபோயினர். அவர்களுடைய வாழ்வுக்கு இப்படியான ஒரு முடிவு ஏற்பட்டதையிட்டு நாம் மிகுந்த கவலை அடைகிறோம்.

யுத்தம் தரையிலும் கடலிலும் சிறிலங்காவால் நடாத்தப்படுகிறது. எங்களுடைய தேசிய செல்வங்கள் ஆக்கிரமிப்பாளனால் கொள்ளை யிடப்படுவதை எம்மால் அனுமதிக்க முடியாது. எங்களுடைய தேசத்தினதும் மக்களதும் நன்மைக்காக நாம் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தவிர்க்கமுடியாத நிலையிலுள்ளோம்." என அதில் கூறப்பட்டுள்ளது. ◆

## சிறுத்தைப் படையணியின் ......

புலிகள் தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்தினம் விடுதலைப் புலிகளால் சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு பாதுகாப்பு வழங்கவென மணலாறு மாவட்டத்தில் கல்யாணிபுரம் எனும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த மினிமுகாம் ஒன்று தாக்கி அழிக்கப்பட்டுள்ளது. சொற்ப நேரத்தில் இம்முகாமை தாக்கி அழித்த விடுதலைப் புலிகள் அதனைத் தமது பூரண கட்டுப்பாட்டில் கொண்டு வந்து அங்கிருந்த ஆயுதங்களையும் இராணுவத் உபகரணங்களையும் எடுத்துச் சென்றனர். இவ் வெற்றிகரமான தாக்குதலில் பத்து விடுதலைப் புலிகள் வீரச்சாவினைத் தழுவிக் கொண்டதாக தலைமைப்பீடச் செய்திகள் தெரிவிக்கின்றன. ◆

# சுற்றுப்பாதையும் புலிகளால் ......

படையினரை விடுதலைப் புலிகள் மீளவும் மூர்க்கத்தனமாகத் தாக்கினர். இதில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்ட நிலையில் சிறிலங்காப் படைகள் மீளவும் பின்நோக்கி நகர்ந்துகொண்டன.

இதற்கிடையில் புளியங்குளம் பகுதியில் 11ஆம் திகதி வியாழக்கிழமை சிறிலங்காப் படையினரின் உதவிக்கு என விரைந்த எம். ஐ. 24 ரக உலங்குவானூர்த்தியை சிறிலங்கா விமானப்படை இழந்துள்ளது எனக் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால், சிறிலங்காவிற்கு துருப்புகளை ஏற்றி இறக்குவதில் பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது எனவும் விமானத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க 'லயன் எயர்' எனும் தனியார் விமானக் கம்பனியார் உதவியை நாடி உள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் தன்னிடமிருந்த நான்கு எம். ஐ. 24 ரக உலங்கு வானூர்திகளில், புளியங்குளத்தில் இழந்தது உட்பட மூன்றை இழந்துவிட்ட நிலையில் ஒரே ஒரு எம். ஐ. 24 ரக உலங்குவானூர்த்தியை மட்டுமே நம்பி இருக்க வேண்டிய நிலை சிறிலங்காவிற்கு ஏற்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், இதுவும் எப்போது வீழ்த்தப்பட்டு விடுமோ எனும் அச்சத்தில் சிறிலங்கா விமானிகள் வடக்கு–கிழக்கு யுத்த முனைகளூடாக இவ்விமானத்தை ஓட்டுவதற்கு அஞ்சி வருகின்றனர்.

இதேவேளை சிறிலங்காவின் டாங்கி அணிகளை நேரடியாகச் சந்திக்கக் கூடிய அளவிற்கு விடுதலைப் புலிகளின் டாங்கி எதிர்ப்புப் படையணியும் பலமடைந்து விட்டதாக இராணுவ அவதானிகள் கருத்து கின்றனர். போதிய அளவு டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களும் டாங்கி அழிப்பு நிலக்கண்ணிகளும் விடுதலைப் புலிகளால், சிறிலங்காப் படைமுகாம் வீழ்ச்சிகளின்போது திரட்டப்பட்டு விட்டதாகவும், இத்துடன் ஆட்டிலெறி செலுத்திகளும் அவற்றிற்கான ஷெல்க ளும் விடுதலைப் புலிகளிடம் இருப்பதினால், டாங்கிகளின் துணை கொண்டு முன்னேறும் சாத்தியம் வெகு குறைவாகவே சிறிலங்காப் படையின ருக்கு உண்டெனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதுவரை முடிவடைந்த 4 மாத காலத்தில் 'ஜெயசிக்குறு' நடவடி க்கையின் மூலம் 12.5 கிலோ மீற்றர் தூரத்தையே ஆக்கிரமித்துள்ள சிறிலங்காப் படையினர் தாம் திட்டமிட்டபடி 'ஜெயசிக்குறு' நடிவடிக்கை மூலம் பாதை திறப்பது என்பது பகற்கனவாகவே உள்ளது. அத்துடன், ஆக்கிரமிக்கும் பிரதேச ங்களில் நீளப்போக்காக படைகளை நிறுத்தி முன்னேறும் சிறிலங்கா அரசுக்கு, அது பாதை திறப்பதற்கென திட்டமிட்ட இடம் வரை நகர ஆட்பலமும் போதாது உள்ளதாகவும் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒட்டுமொத்தமாக புலிகளைப் பலவீனப்படுத்தவென ஆரம்பிக்கப்பட்ட 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கை தனது இலக்குகளை ஈட்டமுடியாத வகையில் புலிகளால் பலவீனப்படு த்தப்பட்ட நிலையில் சிறிலங்கா இராணுவத்தினர் மத்தியில் பெரும் மன அதிருப்தியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை சிறிலங்காப் படையினரின் தோல்விகளை வார்த்தைகளால் சமாளிக்கும் முயற்சியில், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை ஆறுமாதங்க ளிற்குள் யுத்தத்தை முடித்துவிடுவோம் என மீளவும் வீறாப்புப் பேசுகிறார். இவர் யாழ்ப்பாணத்தை ஆக்கிர மித்ததும், புலிகளை விரட்டிவிட்டோம், இனி அவர்கள் கடலில் குதிக்க வேண்டும், அல்லது சரணடைய வேண்டும், அல்லது சயனைற் அருந்த வேண்டும் என சர்வதேச பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்தார். ஆனால், இன்று சிறிலங்கா, 3000க்கு மேற்பட்ட படையினரை யாழ். ஆக்கிரமிப்பின் பின் இழந்துள்ளதும் அல்லாமல் குடா நாட்டிற்கான கடல்வழிப் பாதை தடுக்கப்பட்டு, வான்வழிப் பாதை கேள்விக்குறியாக்கப்பட்ட நிலையில் தடுமாறுகின்றது. பாதுகாப்புச் செலவீன ங்கள், சந்திரிகா சமாதானத்தை ஏற்படுத்தி தேச வளம் காப்பேன் என மக்களுக்கு உறுதிமொழி கொடுக்கை யில் இருந்ததை விட பலமடங்காக அதிகரித்துள்ளது. ஆக ஒட்டு மொத்தமாகப் பார்க்கின், பாதை திறக்கவெனப் புறப்பட்ட சந்திரிகா ப்படை சிறிலங்காவின் அழிவிற்கான பாதையை அகலத் திறந்து கொண்டிருக்கிறது. சமாதானத்திற்கான யுத்தம் எனப் புறப்பட்ட சந்திரிகா தமிழர்களுடைய சமாதானத்தை மட்டுமல்ல முழு இலங்கைத் தீவின் சமாதானத்தையும் சீர்குலைத்து இராணுவ வெறியாளராக வெற்றிகரமான நான்காவது ஆண்டில் தனது சர்வாதிகார ஆட்சியை தொடர்கிறார். இதனால்தான், முன்னாள் சிறிலங்கா விமானப்படை தளபதி ஒருவர், சிறிலங்காப் படைகள் பாதை திறக்கப்புறப்பட்டு குறுக்குப் பதையில், தடுமாறுகின்றனர் என வர்ணித்துள்ளார். 'ஜெயசிக்குறு' நடவடிக்கை படுதோல் வியைத் தழுவிக்கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் இந்த அளப்பரிய வெற்றிகளுக்கு, சர்வதேச தமிழர்களின் பங்களிப்பும் ஒரு காரணமெனக் கருதும் சிறிலங்கா, சர்வதேச ரீதியிலும் தமிழர்களின் அமைதிவாழ்வைக் குலைக்கக்கூடிய வகையில், நாடு கடத்தல் உடன்படி க்கைகளில் கையெழுத்திடத் துடிக்கிறது.

அண்மையில், சிறிலங்கா வின் சார்பில் பிரிட்டனுக்கு விஜயம் செய்த – தமிழ்ப் பெயர் கொண்ட சிங்கள அமைச்சர், லக்ஸ்மன் கதிர்காமர், தனது வெளிவிவகார அமைச்சு என்ற அந்தஸ்த்தைப் பயன்படுத்தி, பிரிட்டனிடம் இத்தகைய நாடு கடத்தல் உடன்படிக்கையில் இருதரப்பினரும் கையெழுத்திட ஆவல் தெரிவித்து மூக்குடை பட்டுள்ளார். நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறாத தமிழர்களின் வாழ்வில், எத்தகைய குறுக்கீட் டையும் ஏற்படுத்த முடியாது என பிரித்தானியா நேரடியாகவே கையைவிரித்துவிட்டது. இவ்வாறே, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலும் தமிழர் விரோத நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் முயற்சியில் சிறிலங்கா பகீரதப்பிரய த்தனம் செய்து வருகிறது. ✳

www.tamilarangam.net



# இராணுவ வேலிதான் சமாதானத் தீர்வா?

பூவரசம் வேலி யாழ். குடாநாட்டை அடையாளம் காண்பதற்கான ஒன்றாக இருந்த காலம் மலையேறி, இராணுவ வேலிகள் யாழ். குடாநாட்டை இனங் காட்டுகிற புதிய காலம் சந்திரிகா அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

முற்றம் நிறைந்த செவ்வரத்தம் பூக்களின் மலர்ச் சிவப்பைக் கூடக்கண்டு மிரளும்



மென்மனதுடன் வாழ்ந்த குடாநாட்டு மக்கள், சிங்களப் படையினரின் இனஅழிப்பு நடவடிக்கைகளினால் தெருவெல்லாம் இரத்தத்தால் சிவக்கின்ற வாழ்வை தமது அன்றாட வாழ்வாக அனுபவித்துத் துடிக்கின்றனர். பனங்காய் தொப்பென விழுந்தால், தேங்காய் தொம்மென விழுந்தால் துணுக்குறும் அளவுக்கு அமைதி தவழ்ந்த பூமியிலே குண்டொலியும் எறிகணை அதிர்வும் துப்பாக்கி வேட்டொலியும் முழங்க, பதற்றத்துடன் மக்கள் அடிமை வாழ்வு வாழ்கின்றனர். ஆயுத முனையில் தமிழர்களின் அரசியல் பணிவு பெறப்படு கிறது. பச்சைப் பசேலென பயிர் விளைந்து பாடுபட்ட விவசாயி மனம் குளிர்வித்த மண், குண்டுங் குழியுமாய் சிறிலங்காப் படைகளின் குண்டுவீச்சில் குளிக்கிறது. அள்ள அள்ளக் குறையா மீன்வளம் தந்த கடற்பரப்பு, கடும் தடைச் சட்டங்களால் மீனவர் இன்றி காட்சி

– பற்றிமாகரன் –

அளிக்கிறது. மீனவர் தொழில் இழக்க மீன்களாவது பல்கிப் பெருகியதா என்றால், அதுவும் இல்லை. சிங்களப் படைகளின் கொடுமையான குண்டுகளால் கூட்டம் கூட்டமாகச் சாகும் மீன்கள், தேக்கம் தேக்கமாகக் கரையொதுங்கும் காட்சி பரிதாபமானதொன்று.

இவ்வாறு சர்வதேசச் சட்டங்களுக்கு முரண்பட்ட வகையில், தேசவளங்கள், மூலவளங்கள், மனித உயிர்கள், மனித மாண்புகள், மனித உரிமைகள் அனைத்துமே அழிக்கப்பட்டும் அச்சுறுத்தப்பட்டும் வரும் ஒரு சூழலில், சமாதானம் என்ற ஒன்று தமிழ் மக்களினால் மிகக் கடுமையாகத் தேடப்படும் ஒன்றாக உள்ளது.

ஆனால், இந்த சமாதானம் என்பது ஆக்கிரமிப்பாளனிடம் சரணாகதி அடைவது என்று பொருள் கொள்ளப்படக் கூடாது. தாம் வாழ்ந்த பூமியில்– தாம் ஆண்ட பூமியில் தம் சொந்தத் தாயகத்தில் பாதுகாப்பான அமைதியான வாழ்வு வாழுகின்ற சூழல்தான், தமிழர்கள் தேடும் சமாதானம். தங்கள் பள்ளிக் குழந்தைகளைத் தம் கண் எதிரே பால–யில் வன்முறைப்படுத்திக் கொன்று அழிக்கும் பரிதாபக் காட்சியைத் தங்கள் உடன்பிறப்புக்கள், வான் – எறிகணைத் தாக்குதலுக்கு அஞ்சி, பாதுகாப்புத் தேடும்படி அரசே பணித்துவிட்டு பாதுகாப்புத் தேடிய இடங்களிலேயே குண்டுகளை வீசி, ஒட்டுமொத்தமாகக் கொன்றழிப்பதைப் பார்த்திருக்கும் அவல வாழ்வை, உலக வரலாற்றின் கேவலமான அத்தியாயங்கள் தமது வரலாறாகப் பதிவாவதைப் பார்த்தும் வாழாதிருக்க வேண்டிய தன்மையைத் தமிழ்மக்கள், சமாதான வாழ்வாகக் கருதமுடியாது.

தமிழன், தான் அரும்பாடுபட்டுக் கட்டிய சொந்தவீட்டில் வசிப்பதற்கும் இராணுவ அனுமதி பெறவேண்டிய புதுமையான அடக்குமுறை நடைமுறையாக உள்ளது. தான் விரும்பியவாறு, தொழில் செய்ய முடியாது – கல்வி கற்க முடியாது – நடமாட முடியாது – வழிபாடு கூடச் செய்ய முடியாதவாறு, எதற்கும் அனுமதி – எதற்கும் சோதனை எனும் ஒடுக்குமுறையைத் தாங்க வேண்டிய நிர்ப்பந்தம்! இதுதான் சந்திரிகா உருவாக்கிய இராணுவ வேலிகளின் பின்னாலான சமாதான வாழ்வு. இதற்குப் பெயர்தான் 'சமாதானத்திற்கான போர்'. இதற்குக் காட்டப்படும் காரணம், தமிழ் மக்களைப் புலிகளிடம் இருந்து தாம் விடுவித்தல் எனும் தந்திரக்கதை.

சந்திரிகா, சமாதானத் தீர்வைக் கொண்டுவந்து போரை முடிவுக்குக் கொண்டு வருவதாக அளித்த வாக்குறுதிதான் அவருக்கு ஆட்சி அமைப்பதற்கான அனுமதியைக் கொடுத்தது. ஆனால் வார்த்தை தவறிய சந்திரிகா, தமிழரை வதைத்து அழித்து 'சமாதானம்' என்ற போர்வையில் தனது அரசியல் திணிப்புக்களை, அடக்குமுறைகளைத் தமிழர் எதிர்க்காதவாறு அவர்களது தேசிய பாதுகாப்புக்கான சக்தியை அழிக்கத் துடிக்கிறார்.

ஆனால், இது பகற்கனவு. நடைபெற முடியாத சிங்கள பேரினவாதப் பேராசை என்பதை, முல்லைத்தீவு முதல் மதியமடு வரை சிங்களப் படைகளும் சந்திரிகாவும் படித்துள்ளனர். அது மட்டுமல்ல, தமது இராணுவ நலன்களுக்கும் ஆயுத விற்பனை விஸ்தரிப்புக்களுக்கும் சிறிலங் காவின் தேசிய பாதுகாப்புக்கு உதவுதல் என்ற போர்வையில் நாடகமாடும் சில சர்வதேச நாடுகளுக்கும் பிராந்திய மேலாண்மை சக்திகளுக்கும், சிறிலங்காப் படையினரால் தமிழரைக் கபளீகரம் செய்ய முடியாது என்ற உண்மை உணர்த்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்த சர்வதேச வல்லாதிக்க விருப்பு நாடுகளிடம் இருந்தும் பிராந்திய மேலாண்மைச் சக்திகளிடம் இருந்தும், இவைகளின் அனுசரணையுடன் அப்பட்டமான இனஅழிப்பைத் துணிகரமான முறையில் தமிழர்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தும் சிறிலங்கா எனும் அந்நிய அரசிடம் இருந்தும், தமிழ் மக்களைக் காக்க வேண்டிய கடமை ஐக்கிய நாடுகள் சபையினதும், அனைத்து அமைதி பேணும் அமைப்புக்களினதும், மனித உரிமை அமைப்புக்களினதும் பொறுப்பாக உள்ளது. ஆனால், இவைகளும் உரக்கப் பேசாதவாறு சிற–லங்காவின் திட்டமிட்ட – உண்மைக்கு மாறான சர்வதேசப் பரப்புரைகள் உலக உலா வருகின்றன. இதனை உடைத்தெறிந்து, உண்மையினை உலகுக்கு உணர்த்தும் வாழ்வாக தமது வாழ்வை மாற்ற வேண்டிய பெரும்பணி புலம்பெயர் தமிழீழ மக்களுக்கும் சகோதரத் தமிழர்கள் அனைவருக்கும் சவாலாகக் கண்முன்னே நிற்கிறது.

இதனைத் தமிழினக் கடமையாக ஏற்று, சர்வதேசத் தமிழர்களும் தேசக் கடமையாக ஏற்று, சர்வதேச புலம் பெயர் தமிழீழ மக்களும் வேகமாக விவேகமாக விடுதலைப் புலிகளின் சர்வதேச பணி–மனைகளின் இணைவுடன் முன்னெடுத்துச் சென்று வெற்றி பெறவேண்டும். முதலில், தமிழர்கள் தமது வரலாற்றுத் தாயகத்தை, தாம் ஆண்டபூமியை, அமைத்திருந்த ஆட்சியைத்தான் மீளவும் அமைத்து, தமது பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புகிறார்களே தவிர, நாட்டைப் பிரிக்கவோ அல்லது பிரிவினை பேசி அரசியல் லாபம் தேடவோ போராடவில்லை என்ற உண்மை – எடுத்து விளக்கப்பட வேண்டும். அடுத்து, இது தேசிய விடுதலைப் போராட்டமே தவிர சிறுபான்மை – பெரும்பான்மை முரண்பாடோ அல்லது பல்தேசிய சமூகங்களின் பிரச்சினையோ அல்ல என்பது தெளிவாக்கப்படல் வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டம் திடீரெனத் தோன்றியதல்ல, அந்நிய ஆட்சியாளர்களால் இணைக்கப்பட்ட ஜனநாயக வாழ்வில், சிங்கள – தமிழ் ஜனநாயக அரசிற்கான, அந்நிய அரசின் அரசியல் சாசன நிபந்தனைகளை சிங்களவர் மீறியதினால் அதனை ஈடுசெய்ய – மாற்றி அமைக்க தமிழ்த் தலைமைகள் எடுத்த எல்லாவ–தமான ஜனநாயக வழிமுறைகளும் தோல்வி அடைந்த நிலையில், தமிழர்களின் சார்பாக, சட்டப்படி பாராளுமன்றத்தில் சுயநிர்ணய உரிமைப் பிரகடனம் விடுக்கப்பட்டு சர்வதேச வழமைப்படி தேர்தல் பிரகடனமாக்கப்பட்டு குடியொப்பத்திற்கு விடப்பட்டே, "தமிழீழத் தேசப் பிரகடனம்" விடுக்கப்பட்டது. இதனை முன்னெடுக்கும் சட்ட உரிமை, சர்வதேச உரிமை தமிழ் மக்களின் இராணுவமாகவும் தமிழீழ மக்களின் அரசு நோக்கிய அரசாகவும் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுடையதாகவே தொடர் கிறது.

இந்த உண்மைகளை ஏற்று, சர்வதேச உலகம் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து, தமிழ் மக்களின் 'மக்கள்' என்ற உரிமையை – 'சுயநிர்ணய உரிமை' என்ற மனித உரிமையை அனுபவிக்க அனுமதித்தால் இராணுவ வேலிக்குள் சமாதானத் தீர்வு தேடும் நாடகம் முடிவடைந்து, சிறிலங்காவின் ஆக்கிர மிப்புப் படைகள் விலகி உண்மையான அரசியல் தீர்வுக்குப் பாதை பிறக்கும். ✱

தமிழன், தான் அரும்பாடுபட்டுக் கட்டிய சொந்தவீட்டில் வசிப்பதற்கும் இராணுவ அனுமதி பெறவேண்டிய புதுமையான அடக்குமுறை நடைமுறையாக உள்ளது. தான் விரும்பியவாறு, தொழில் செய்ய முடியாது – கல்வி கற்க முடியாது – நடமாட முடியாது – வழிபாடு கூடச் செய்ய முடியாதவாறு, எதற்கும் அனுமதி – எதற்கும் சோதனை எனும் ஒடுக்குமுறையைத் தாங்க வேண்டிய நிர்ப்பந்தம்! இதுதான் சந்திரிகா உருவாக்கிய இராணுவ வேலிகளின் பின்னாலான சமாதான வாழ்வு. இதற்குப் பெயர்தான் 'சமாதானத்திற்கான போர்'.

www.tamilarangam.net



# ஒரு வருடத்திற்கு மேல் யுத்தத்தை தொடர முடியாது!

- சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் பகிரங்கக் கூற்று!
- இராணுவத்தினர் செயற்பாடுகளும் இதை உறுதியாக்குகின்றன

"இந்த யுத்தம் மேலும் ஒரு வருடத்திற்கு மேல் தொடருமானால் எமது நாடு பொருளாதார ரீதியாக ஈடுசெய்ய இயலாத வீழ்ச்சியை அடைந்துவிடும். எவ்வகையிலேனும் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும். இதுவே எமது விருப்பமாகும். இந்நாட்டில் கைவிடப்படமுடியாத ஒரு பிரச்சினை ஒன்று உண்டு என்பதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிப்பதா அல்லது யுத்தத்தை தொடர்வதா என்பதை இன்னும் சில மாதங்களுள் முடிவெடுத்தேயாக வேண்டும். பிரதி பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையோ இன்னும் ஆறு மாதத்திற்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதாகக் கூறுகின்றார். மழைக் காலம் ஆரம்பமானால் யுத்தத்தின் போக்கு நன்றாகத் தெரியும். சிறிலங்கா அரசிற்கு சரியான நிலைப்பாடில்லை. இதுவே இனப்பிரச்சினையை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதில் தடையாக இருக்கிறது. அரசாங்கம் சமர்ப்பிக்க முயலும் தீர்வுத்திட்டத்துடன் ஏராளமான குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு முன் அவைகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். அயர்லாந்து பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பிரித்தானிய அரசாங்கம், எதிர்கட்சியுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க முயல்வது போல எமது நாட்டிலும் அத்தகையதொரு முயற்சியே பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியும். நான் எனது முடிவை அரசாங்கத்தின் மேல் திணிக்கவில்லை. ஆனால் எதிர்க்கட்சி என்ற முறையில் அத்தகையதொரு பேச்சுவார்த்தைக்கு தயாராகவே இருக்கின்றோம்" என சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் பத்திரிகையாளர்களுக்கு விடுத்த செய்தி ஒன்றில் கூறியுள்ளார்.

இதேவேளை "நாம் யுத்தத்தில் பாரிய வெற்றிகளை அடைந்து கொண்டிருக்கிறோம். விரைவில் புலிகளை அழித்து விடுவோம்" என சிறிலங்கா பிரதி பாதுகாப்பமைச்சர் அனுரத்த ரத்வத்த சிறிலங்கா பாராளுமன்றத்தில் கொக்கரித்துள்ளார்.

ஆயினும் சிறிலங்கா பாதுகாப்புப்படையினர் இஸ்ரேலின் ஆளில்லாமல் இயங்கும் UVA (யூவீஏ) உளவு விமானங்களை கொள்வனவு செய்யக் காட்டிய விருப்பத் திற்கிணங்க அந்த விமானத்தை அநுராதபுரத்தில் பரீட்சார்த்தமாக பறக்க வைத்துக்காட்டிய இஸ்ரேலிய கம்பெனி, அதன் விலை 275,000 அமைரிக்க டொலர் எனவும் கூறியுள்ளது. இந்த அளவு தொகையினைக் கொடுத்து அவ்விமானத்தினை சிறிலங்காவினால் கொள்வனவு செய்ய முடியாததினால் அக்கம்பெனி பிரதிநிதி இஸ்ரேல் திரும்பியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவம் சிறிலங்காவின் பொருளாதாரம் ஈடுசெய்ய முடியாத அளவு வீழ்ச்சியை நோக்கி விரைவாகச் சென்று கொண்டிருப்பதையே காட்டுகின்றது.

இது ஒருபுறமிருக்க யாழ் குடாநாட்டிற்கு விஜயம் செய்த பத்திரிகையாளர்களிடம் சிறிலங்கா இராணுவத்தினர் பலர் தமக்கு மோசமான பராமரிப்பு கிடைப்பதாகவும் போக்குவரத்து வசதியின்றி தாம் தவிப்பதாகவும் கூறியுள்ளனர். தொடர்ச்சியான அச்சத்துடன் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இவர்களது மனநிலை பாதிப்படைந்துள்ளதையும், ஒழுக்கம், கட்டுப்பாடு ஏதுமின்றி இவர்கள் சேவை புரிவதையும் கொழும்பு திரும்பி வந்த பத்திரிகையாளர்கள் பகிரங்கப்படுத்தியுள்ளனர். பலாலி விமானநிலையத்தில் தமது சகாக்களையும், காயப்பட்ட நிலையில் இருந்த இராணுவத்தினரையும் தள்ளி விழுத்தி, ஏறி மிதித்துக் கொண்டு கொழும்பு செல்லும் விமானம் நோக்கி ஓடிய சிறிலங்காப்படையினர் இராணுவ சிரேஸ்ட அதிகாரி ஒருவரையும் முட்டி மோதி விழுத்திவிட்டு விமானத்தில் இடம்பிடிக்க முயன்ற சம்பவத்தினை நேரில் கண்ட மேற்படி பத்திரிகையாளர்கள், சிறிலங்கா இராணுவம் யாழ் குடாநாட்டில் போராடுவதற்குரிய மனோநிலையையும் இராணுவ ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் இழந்து செல்வதை காணக்கூடியதாகவுள்ளது எனக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்காவின் கருத்தானது இராணுவ வட்டாரங்களிலும் எதிரொலிப்பதை காணக்கூடியதாக உள்ளதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். ✷

# தாண்ட முடியாத தடைகள்

**ஈழநாதம் - 09.09.97 ஆசிரியர் தலையங்கம்**

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளைப் பெறாதுவிடின் அரசியல் யாப்பில் எந்தவொரு சட்டத்திருத்தத்தையும் செய்யமுடியாது என்பது சிறீலங்கா அரசியில் யாப்பில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் அரசியல் யாப்பிற்கு முரணானது என உயர்நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்துவிட முடியும். ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கமோ பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறத்தவறின் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் சட்டத்திருத்தம் கொண்டுவரப்படும் எனத் தற்பொழுது பேசிவருகின்றது. ஆனால், இது அரசியல் யாப்புச் சட்டத்திற்கு முரணானது ஆகும். இதற்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்குப் பதிவாகும் பட்சத்தில் சர்வஜன வாக்கு செல்லுபடியற்றது என்றே உயர்நீதி மன்றம் தீர்ப்பளிக்கும். இது அரசியல் ஊகமோ அன்றி அரசியல் வாதிகளின் பேச்சின்பால்பட்ட விடயமல்ல. அரசியல் யாப்பில் நன்கு தெளிவாக்கப்பட்ட விடயமாகும். இதனை முன்னர் உயர்நீதிமன்ற நீதியரசரான குலதுங்கவும் உறுதிசெய்துள்ளார். அவ்வாறு அரசியல் யாப்புக்கு மீறுதலான சட்டத்திருத்தத்தைக் கொண்டுவர முடியுமானால் நீதிமன்றங்களை இல்லாது ஒழிக்கவேண்டும் என இந்நீதியரசர் தெரிவித்துள்ளார். இவ்வாறு இருந்தும் ஜனாதிபதி சந்திரிகா சர்வஜன வாக்கெடுப்பு பற்றியும் அரசியல் யாப்பு திருத்தம் பற்றியும் பேசுவதானது, அவரின் அறியாமையின் வெளிப்பாடோ அல்லது பத்தாம்பசலித்தனமோ அல்ல. இது கூட ஒருவகையில் அவரது அரசியல் லாபம் தேடும் குறுக்குவழிகளில் ஒன்றேயாகும். சந்திரிகா குமாரதுங்காவைப் பொறுத்து பாராளுமன்றத்தில் அரசியல் யாப்பு திருத்தம் சட்டமூலத்தைக் கொண்டுவருவது என்பதும் அதனைச் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடுவதும், இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வினைக் கொண்டு வந்துவிட வேண்டும், நாட்டில் சமாதானம் உருவாகிவிடல் வேண்டும் என்ற நோக்கத்தின்பால்பட்டது அல்ல. அவ்வாறு இருந்திருப்பின் காலம் கடந்த இந்நிலையில், இம்முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டிய தேவை வந்திருக்காது. இனப்பிரச்சினைத் தீர்வு காண சந்திரிகா அரசின் அணுகுமுறையில் அதிகாரப் பரவலாக்கலுடன் கூடியதான அரசியல் தீர்வு என்பது, அதன் அரசியல் பதவிக்கு ஒரு வழிமுறையாகும். ஆனால், இதுவும் உணர்வு பூர்வமான விருப்பமல்ல. அரசியல் தேவையாக உள்ளது. இதன் மூலம் மேலதிக அரசியல் இலாபத்தைத் தேடிக்கொள்வதே அரசாங்கத்தின் குறியாகும். இந்தவகையிலேயே பாராளுமன்றத்தில் சட்டமூலம் சமர்ப்பிப்பும் சர்வஜன வாக்கெடுப்பும் என்ற அறிவித்தலும் ஆகும். மறுவழமாக சட்டமூலமாக பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்படுவதும் சர்வஜன வாக்கெடுப்பு தள்ளுபடி செய்யப்படுவதும் சந்திரிகா அரசினைப் பொறுத்து அதன் குறிக்கோள் நிறைவுசெய்யப்படுவதற்கு ஒப்பானது ஆகும். அதாவது, தனது அரசியல் முயற்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியினாலும் அது உருவாக்கியுள்ள அரசியல் யாப்பினாலும் என்ற ரீதியில் சந்திரிகா அரசாங்கம் தனது அரசியல் முயற்சியில் இருந்து பின்வாங்கிவிட முடியும். இதேசமயம் தமது குறிக்கோளான இராணுவ தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்ளமுடியும். இவ்வாறான ஒரு சிந்தனை அரசுக்கு இருக்குமானால் இது சாத்தியமாகப் போவதில்லை எனத் தெரிந்து கொண்டும், ஒரு முயற்சியில் தான் ஈடுபாடு கொண்டுள்ளது போன்று அது காட்டியிருக்கமாட்டாது. ஆரம்பத்தில்தான் அரசியல் யாப்பு விளங்காமல் சந்திரிகாவினால் கூறப்பட்டது என வைத்துக் கொண்டாலும் கூட தற்பொழுது சகலருக்கும், இது சாத்தியமாகாத வழி எனத் தெரிந்த பின்னரும் அவ்வழியினை வலியுறுத்த வேண்டிய தேவையில்லை. இனப்பரச்சினைக்கு தீர்வுகாண புதிய வழிமுறைகளைத் தேட அது முயற்சித்து இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்ய சந்திரிகா அரசு தயாராக இல்லை. ஏனெனில், அரசியல் தீர்வு என்பது சந்திரிகா அரசைப் பொறுத்து பேச்சளவிலானது மட்டுமேயாகும். ✶

# மக்கள் விருப்பிற்கு மாறானோர்

அரசியல் யாப்பு சீர்திருத்த யோசனைகள் தொடர்பாகவும் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாகவும் ஆராய்ந்து இறுதி முடிவு எடுப்பதற்கான சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எதிர்வரும் 25ம் திகதி சந்திப்பொன்றை நடத்த உள்ளனர். ஜனாதிபதி சந்திரிகா நிறைவேற்ற முனையும் இவ் அரசியல் யாப்பு சீர்திருத்தமானது, இன்றைய அரசியல் சூழ்நிலையில் அரசியல் யாப்பு சட்டங்களுக்கு ஒப்ப நிறைவேற்ற முடியாதவை என்பது ஒருபுறம் இருக்க, இவ்வதிகாரப் பரவலாக்கம் குறித்துப் பேசுவதற்கு என்ன இருக்கின்றது என்பதும் இதில் கூட்டம், வகிக்கும் பாத்திரம் என்ன என்பதும் கேள்விக்குரியவையாகும். இவ்வதிகாரப்பரவலாக்கலுக்கு ஆதரவு தேடும் முகமாக சந்திரிகா அரசாங்கம் யாழ் குடாநாட்டில் நடத்திய கருத்தரங்கில் தமிழ் மக்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் இவ் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை அவர்கள் ஏற்பதற்கில்லை என்பதையே வெளிக்காட்டியுள்ளன. இது குறித்து யாழ் குடாநாடு சென்று திரும்பிய "திரயின" பத்திரிகைச் செய்தியாளரே, சுட்டிக்காட்டியுள்ளார். யாழ் மாவட்டத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல எதிர்க்கவும் செய்கின்றனர் என அப்பத்திரிகையின் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமல்ல முன்னைய அரசாங்கம் போன்றே இவ் அரசாங்கம் உள்ளது எனவும் இதனால் இதனை நம்புவதற்கில்லை எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். சந்திரிகா அரசாங்கமானது தன்னை ஏதோ தமிழ் மக்களின் இரட்சகர் போல் காட்டிக்கொள்ள முனைவது வேடிக்கையானது. சந்திரிகா அரசாங்கம் தமிழ் மக்களை தனது இராணுவத்தின் பிடியில் வைத்துக் கொள்ள முனைகின்றது என்பதும் அதிகாரப் பரவலாக்கல் என்ற ரீதியில் தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்க விழைகின்றது என்பதும் தமிழ் மக்களுக்கு தெரியாதது அல்ல. பெரும் அர்ப்பணிப்புக்களுடனும், தியாகத்துடனும் விடுதலைப் போராட்டம் ஒன்றை நடாத்திவரும் மக்கள் கூட்டத்திடம், இராணுவ ஆக்கிரமிப்புக்குள் உட்பட்டுவிட்டதனால் உணர்வுகள் அடங்கிப் போய்விடும் என எதிர்பார்ப்பது மடத்தனம். ஆனால், அதிகார அபிலாசைகளையே குறியாகக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற குழுக்கள் மக்களின் இவ் உணர்வுகளை பிரதிபலிப்பவர்கள் அல்ல. அவர்களுக்குத் தேவையானது அதிகாரமும் சுகபோகவாழ்வுமே. சந்திரிகா குமாரதுங்கா போன்ற சிங்கள அரசியல்வாதிகள் ஏழைச் சிங்களவர்களைப் பலியிட்டு தமது அதிகாரத்தை நிலைநிறுத்த முனைகின்றனர் என்றால், கூட்டணி போன்றவை, தமது இனத்திற்காக தம் இன்னுயிர் ஈய்ந்தவர்களின் தியாகத்தில் குளிர்காய்கின்றனர். இல்லாதுவிடில், தமிழ் மக்களே நிராகரிக்கும் இவ் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் குறித்து சிங்கள ஆட்சியாளர்களுடன் பேசுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எவ்வாறு முற்படுவர். அன்றி சந்திரிகா அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தினை எவ்வாறு வரவேற்பர்? எவருக்குமே தெரியாத முற்போக்கான அம்சங்கள் கூட்டணியினருக்கு எங்கு தெரிகின்றது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முறியடித்து, தான் விரும்பிய ஒரு அரசியல் தீர்வு திட்டத்தை திணிக்கவே சிங்களப் பேரினவாத அரசு விரும்புகின்றது.

இவற்றிற்கு வெளிச்சக்திகள் சிலவும் ஆலோசனையும் உதவியும் வளங்குகின்றன. அவ்வாறு உதவும் வெளிச்சக்திகள் சிலசமயம் தமிழருக்கும் குறிப்பாக கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களுக்குப் போதனையும் செய்கின்றன. இதனைக் கூட்டணி போன்ற தமிழ் குழுக்கள் வரவேற்பதோடு அவற்றிற்கு தமது ஆதரவையும் வழங்கி வருகின்றன. இந்நிலையானது சிங்களப் பேரினவாத அரசிற்கு வெளிச்சக்திகள் வழங்கும் ஆதரவிற்கு எந்த விதத்திலும் குறைவானதல்ல. ஒருவகையில் அதிகம் என்றே கூறலாம். ஏனெனில், மக்கள் தமது உரிமைக்காக இரத்தம் சிந்திப் போராடிக் கொண்டிருக்கையில், இவர்கள் தமது இனத்திற்கு அடிமை சாசனம் எழுத விழைகின்றனர். மக்களின் விருப்புக்கு மாறாக அவர்களின் பெயரில் தமக்கு ஆதரவும் தேட முற்படுகின்றனர். இது தமிழ் இனத்திற்கு இவர்கள் விளைவிக்கும் துரோகம் என்பதைத் தவிர மறுபேச்சுக்கு இடமில்லை.

நன்றி -ஈழநாதம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மேஜர். சுரேந்திரன்

**சிறீபாஸ்கரன் - முருகாபுரி (20.10.62 - 26.09.88)**

அன்றைய காலைப்பொழுது மிகவும் அமைதியாக மலர்கின்றது. அமைதிக்குப் பின் ஆபத்து ஏதும் உண்டு என்பது நியதி. எமது தோழர்கள் அன்று இரவு நிகழப் போகும் அதிர்ச்சியையும் சோகத்தையும் அறியாதவர்களாய் தமது பாசறைகளில் தத்தமது வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த மோதலில் 2-வது லெப்டினன்ட் ராமுவின் வீரமரணத்தால் பாதிக்கப்பட்டு சோக மயமாகக் காணப்பட்டனர். ஆனால் அவர்களின் செயல்களில் உறுதி மேலோங்கி நின்றது! ராமுவின் வீரமரணத்தை ஈடுசெய்வதற்காக, வீரமரணத்திற்குக் காரணமாயிருந்த IPKF இனரைப் பழிவாங்க சுரேந்திரன் திட்டமிட்டான். 26.09.88 அன்று சுரேந்திரன் தலைமையில் நான்கு பிரிவுகளாக எமது தோழர்கள் புறப்பட்டனர். அதில் ஒரு பிரிவுக்கு சுரேந்திரன் தலைமை தாங்கினான். ஆனால், அதில் வீரமரணத்தைத் தழுவுவான் என்று யாரும் நினைக்கவில்லை! ஆம், அந்தச் சோகமயமான நிகழ்ச்சி அன்று இரவு (26.09.88) நடந்துவிட்டது. தனது தோழர்களை அழைத்துக் கொண்டு கலப்பையாற்றை நோக்கி விரைந்தான். அங்கே எமது தோழன் சுரேந்திரன் மிகவும் வீரத்துடன் சளைக்காமல் போராடி தன் உயிரை தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணித்தான். தமிழீழ மண்ணை தனது செங்குருதியால் நனைத்தான். ஆனால் அவன் உடல் மட்டுமே எம்மைவிட்டுச் சென்றது.

அவனுடைய நினைவுகள் எம்முடனேயே உலாவருகின்றன. அவன் விட்டுச் சென்ற பாதச்சுவடுகளைப் பின் தொடர்கின்றோம். அவனுடைய இழப்பை ஈடுசெய்ய முடியாது. அவனுடன் இருந்த தோழர்கள் யாவரும் கதறி அழுதனர். சுரேந்திரன் போர்த் தலைவனாக நடந்ததில்லை. நண்பனுக்கு நண்பனாக, சகோதரனாக எல்லோருடனும் பழகினான். அவன் அன்பு எல்லோர் மனதிலும் நிறைந்திருந்தது. அவன் தன் வீரமரணத்திலும் காவியம் படைத்தான். அவன் கலப்பையாறு கடைசி மோதலில் (26.09.88) பங்குபற்றி புதிய அத்தியாயம் படைத்துவிட்டுச் சென்றான். அவனுடைய வீரமரணத்தின் போது முதன் முதலாக திருகோணமலையில் IPKF உடனான நேரடி மோதலில் ஆயுதங்களைக் கைப்பற்றினோம். SLR-2, SMG-1, கண்ணிவெடி கண்டுபிடிக்கும் கருவி-1 மற்றும் ரவைகள் ஆகியன அங்கு கைப்பற்றப்பட்டன.

திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிறீபாஸ்கர் என்ற இயற்பெயரைக் கொண்ட சுரேந்திரன் தன்னுடைய பள்ளிப் படிப்பு முதல் தமிழீழத்திற்காக தன்னுடைய பங்களிப்பை அர்ப்பணித்த வன். 1977 கலவரத்தின் போது தன்னுடைய வீட்டை இழந்து இருக்க இடமில்லாமல் ஒவ்வொரு இடமாகச் சுற்றித் திரிந்தவன்.

திருமலையில் தொடர்ந்து நடந்த வன்முறைச் சம்பவங்களால், தமிழின ஒடுக்குமுறையாளர்களாகிய சிறிலங்கா அரசினால் ஏற்பட்ட வெறுப்பினால் சுதந்திரத் தமிழீழம் ஒன்றேதான் எதிர்காலச் சந்ததிக்கு வழி என்று எண்ணிய சிறீபாஸ்கர், 1983-ம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்துகொண்டான். பின் தன் பயிற்சியை முடித்துக் கொண்டு சுரேந்திரன் என்ற பெயருள்ள வேங்கையாக நீண்டகாலப் போராட்டத்திற்கு தன்னைத் தயார்படுத்திக் கொண்டு களத்தில் இறங்கினான். தமிழீழ விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த சுரேந்திரன் முதல் தடவையாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சிக்கென வருபவர்களைப் பாதுகாப்பாக அழைத்து வருவதில் ஈடுபட்டான். பின் வடமராட்சியில் கப்டன் ரஞ்சன் லாலா (வீரமரணம் அடைந்த மத்திய குழு



உறுப்பினர்) உடன் பணிபுரிந்தான். இவன் தனித் தோற்றத்தினால் சிங்களவன் என்று பட்டப்பெயரால் எல்லோராலும் அழைக் கப்பட்டான். சுரேந்திரன் என்றால் தெரியாதவர்கள் கூட சிங்களவன் என்றால் அவரா என்று சொல்கிற அளவிற்கு அன்புடனும், குழந்தை போன்றும் எல்லோருடனும் பழகிவந்தான். அந்த நாட்களில் ரஞ்சன் லாலாவுடன் தமிழீழத்தின் துரோகிகளுக்கு மரணதண்டனை வழங்குவதில் அவன் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

கப்டன் பண்டிதர் (மத்திய குழு உறுப்பினர்) 1984-ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் அட்டகாசம் புரிந்த சிறிலங்கா கடற்படையினரைத் தாக்கி 7 ஆயுதங்களை கைப்பற்றிய நிகழ்விலும் சுரேந்திரன் பங்கு குறிப்பிடத்தக்கது.

மற்றும் அக்காலகட்டத்தில் நடந்த பல தாக்குதல்களிலும் இவன் பங்கு பற்றினான்.

ஒரு முறை சிங்களவன் என இவனை எண்ணிய தமிழ் மக்கள் பிடித்துவிட்டனர். பின்னர் எம்மவர்கள் சென்று அழைத்து வந்தனர். இவனைப் பார்த்து எவருமே தமிழன் என்று சொல்லமாட்டார்கள். வடமராட்சியில் நின்ற சுரேந்திரன், வீரமரணமடைந்த லெப். கேர்ணல் சந்தோசம் மாஸ்டருடன் தன்னுடைய சொந்த மண்ணுக்குப் புறப்பட்டான். அங்கும் அவன் தமிழீழப் பணிகளைச் சளைக்காமல் செவ்வனவே புரிந்தான். ஆபத்தான வேளையிலும் அவனிடம் பதட்டம் இருக்காது. நிதானமாகச் செயற்படுவான். ஆபத் தென்றாலும், குதூகலம் என்றாலும் ஒரே நிலையில் தான் இருப்பான். எதற்கும் அஞ்சமாட்டான். திருமலையில் இவனுடைய சாதனைகளில் முதல் சாதனையாக, வீரமரணமடைந்த லெப். கேர்ணல் புலேந்திரன் தலைமையில் பராக்கிரமபுரத்தில் சிறிலங்கா இராணு வத்திற்கு எதிரான மோதலில் பங்குபற்றினான். இதில் எம்மவர்கள் ஐங்கரன், கடாபி ஆகியோர் வீரமரணமடைந்தனர். இவன் பங்குபற்றிய தாக்குதல்களில் '85-இல் குச்சவெளி போலீஸ் நிலையத் தாக்குதல், சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதல் என்பன குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து 1987-ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் போது யாழ்ப்பாணத்தில் சில நாட்கள் தங்கினான். வீரமரணமடைந்த லெப். கேர்ணல் புலேந்திரனின் இறுதிச் சடங்கை இவன் முன்னின்று நடத்தினான்.

இதற்கிடையில் எமது வீரர் பன்னிரண்டு பேரின் வீரமரணத்தின் எதிரொலியாக இந்திய இராணுவத்துடன் மோதல்கள் ஆரம்பமானவுடன் தன்னுடைய தோழர்களுடன் திருமலையை நோக்கித் தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்தான். இதற்கிடையில் புதுக்கோட்டைச் சந்தியில் (புத்தூர்) எதிர்பாராதவிதமாக இந்திய இராணுவத்தின் மூர்க்கத்தனமான தாக்குதலில் இருந்து வெற்றிகரமாகத் திருமலை சென்ற அவன் முதன் முதலாக அங்கு நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் முக்கிய பங்கு வகித்தான். அதில் கப்டன். அத்தான் (குமார்) வீரமரணமடைந்தான். இந்தத் தாக்குதலில் மிதிக்கண்ணிவெடிகள் (I.P.K.F. இனரால் வைக்கப்பட்டவை) சிலவற்றைக் கண்டெடுத்தான். இப்படித் தமிழின விடுதலைக்காக ஒவ்வொரு அடியையும் நிதானமாக வைத்தான். இவன் எடுக்கும் முடிவுகள் நிதானத்துடன் இருக்கும். பதட்டம் என்பது இவனிடம் துளிகூட இல்லை. அருகில் இராணுவம் என்றாலும் பயப்படாமலும், பதட்டப்படாமலும் கையில் ஆயுதம் ஏதும் இல்லையென்றாலும் முன்னேறுவான். நண்பர்களைக் கேலி செய்வதென்றால் இவனுக்குப் பிடிக்கும். இவனையும் சக போராளிகள் கேலி செய்வார்கள். கடைசி நேரத்திலும் நீண்டகாலப் போராட்டத்திற்கு உணவுப் பொருட்களைச் சேர்த்தவண்ணம் இருந்தான்.

**அவனுடைய செயல்கள், நினைவுகள் எமது நெஞ்சை விட்டு என்றும் அழியாது! அவ் இலட்சியம் நிறைவேற நாம் அவன் விட்டுச் சென்ற பணியில் எம் தலைவனின் வழி நின்று செயற்பட்டு தமிழீழத்தை வென்றெடுப்போம்.** ◆

# உயிர்த்தெழுதல்

**விழ விழ எழுவோம் !**
**விழ விழ எழுவோம் !**
**ஒன்று விழ நாங்கள்**
**ஒன்பதாய் எழுவோம் !**

**விண்ணின் குண்டுகள்**
**வீழ்த்திய எங்கள்**
**மண்ணின் மரங்கள்**
**மறுபடி தழைத்தன !**
**நெடுங்கடற் கரையில்**
**நேற்றும் புலிகள்**
**சுடுங்குரல் கேட்டோம்....**
**தோள் சிலிர்த்தது !**

**விழ விழ எழுவோம் !**
**விழ விழ எழுவோம் !**
**ஒன்று விழ நாங்கள்**
**ஒன்பதாய் எழுவோம் !**

**தண்ணீர் விட்டோ**
**எரிமலை தணியும்?**
**விண்ணின் புயலை**
**வேலி தடுக்குமோ ?**
**கடலைக் குடிக்க**
**நினைத்தவன் யாரடா?**
**அட ! இங்கெம்மை**
**அழிக்கவும் கூடுமோ?**

**விழ விழ எழுவோம் !**
**விழ விழ எழுவோம் !**
**ஒன்று விழ நாங்கள்**
**ஒன்பதாய் எழுவோம் !**

**கல்லறை களுக்கும்**
**உயிர் இங்குள்ளதால்**
**கொல்வார் கொலை வெறி**
**இங்கெடு படாது !**
**பந்தி பந்தியாய்**
**உயிர் அழியலாம்....**
**செந்தமிழ் ஈழம்**
**செத்துவிடாது !**

**விழ விழ எழுவோம் !**
**விழ விழ எழுவோம் !**
**ஒன்று விழ நாங்கள்**
**ஒன்பதாய் எழுவோம் !**

\- காசி ஆனந்தன்

www.tamilarangam.net

# தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின்

## தியாகி திலீபனின் ஆன்மாவின் ஆணை

### “பரிபூரணமாக கிளர்ந்தெழுக! மக்கள் புரட்சி வெடித்து தமிழீழம் மலரட்டும்”

## தியாகதீபத்தின் கனவை நனவாக்குவோம் இதுவே நாம் செய்யும் உண்மை அஞ்சலி

**வா**ழ்வுக்காய் எவ் உயிரையும் அழிக்கத் துடிக்கும் தற்கால மானிடர்களிடையில், சாவிலும் எவ் உயிருக்கும் துன்பம் விளைவிக்காது, தமிழீழ மக்களையே எந்நாளும் நினைத்து நினைத்து ஏங்க வைத்துவிட்டு, தன் இலட்சியத்திற்காய் உண்ணா நோன்பிருந்து தன் இன்னுயிர் ஈந்து வீரச்சாவைத் தழுவிய சரித்திர நாயகன் தியாகி திலீபன், மண்ணுக்காய் எம் மக்களுக்காய் வித்தாகி, புரட்டாதித் திங்கள் 26 ஆம் நாளுடன் பத்தாண்டுகள் ஆகின்றன.

1987 புரட்டாதி 26ஆம் நாள் என்றதுமே இறந்தகால சரித்திரம் எழுந்து வருகிறது. எங்கள் திலீபன், தமிழீழ மண்ணில் விதையாகி பெரு விருட்சமாகி எழுந்துள்ளான். பத்தாண்டுகள் என்ன, எக்காலத்திலும் தமிழினம் சந்ததி சந்ததியாக இம் மண்ணின் வீரனை மறக்காது.

*"நான் மரணத்திற்கு அஞ்சவில்லை. வாழ வேண்டுமென்றோ ஆள வேண்டுமென்றோ ஆசை கொள்ளவில்லை. எங்களைச் சுற்றி துப்பாக்கிகளும் இரும்புக் கம்பிகளும் நிமிர்ந்து நிற்கின்றன. நாம் அனைவரும் மரணமடைய தயாராகவே இருக்கின்றோம். நாளை நம் மக்கள் அழிக்கப்படும் நிலை ஏற்பட்டால் மீண்டும் நாம் ஆயுதங்களைத் தூக்குவோம். ஆம்! மக்களுக்கு சுபீட்சமான சுதந்திரம் கிடைக்குமானால் அதற்காக நாம் மரணத்தை தழுவவும் தயாராக இருக்கின்றோம்."*

திலீபன் தனது உண்ணாநோன்புக்கு சில தினங்களுக்கு முன் யாழ். கோட்டைக்கருகில் நடைபெற்ற மக்கள் மறியல் போராட்டத்தில் கூறியதே மேலுள்ள தெளிவான, உறுதியான விளக்கமாகும்.

விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தி நிற்பது, ஆள்வதற்கு அல்ல. தமிழீழ மக்களின் வாழ்வுக்குக்கான போராட்டத்திற்கு விடுதலைப் புலிகள் தமது இன்னுயிரையே ஆகுதியாக்குகின்றனர். எம்மின விடிவிற்காய், தமிழ்ச் சந்ததியின் நல்எதிர்காலத்திற்காய் என்றும் சாவை மகிழ்வுடன் சந்திக்க தயாரானவர்களே விடுதலைப் புலி வேங்கைகள்.




இந்திய வல்லரசின் தலையீட்டால் தமிழீழ விடுதலை, தடைகளை எதிர்நோக்கிய நேரத்தில், வெட்ட வந்த கைகளைக் கட்டி அணைத்து – அக் கைகள் நம் பிரச்சினைக்குத் தீர்வுதர வந்தவைகள் என எண்ணிய மனிதர்களின் கண்களைத் திறக்கவைக்க, எங்கள் திலீபன் தன்னுயிர் ஈந்தான். தடைகளைத் தாண்டி போராட்டத்தை முன்னோக்கி நகர்த்த வேண்டிய பணி – போராளிகளுடையது என்பதை போராட்டத் தலைமை முதல் போராளிகள் வரை உறுதியாக நின்றவேளையில் திலீபன் சாத்வீக போராட்டத் திட்டத்துடன் முன்வந்தான். நெஞ்சில் எழுந்த இலட்சியப் பற்று மூலம் எந்தத் தடையினையும் உடைத்து எறியலாம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை விடுதலைப் புலிப் போராளிகளுக்கு இருக்கிறது. இதனால் அத் தியாகத்தைச் செய்ய முன்வந்த பல போராளிகளின் போட்டியின் மத்தியிலும் திலீபனே வென்றான்.

இந்திய – சிறிலங்கா ஒப்பந்தம் என்பதினால் எல்லாமே கிடைக்கப்பெறும் என பெரும்பாலானவர்கள் நம்பிய வேளையில், அது வெறும் இந்திய – சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்தமே தவிர, அதனால் தமிழர் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் ஏற்படாது. ஏற்பட்டாலும், அது அரைகுறையான – இனவெறிப் பேரினவாதத்திற்கு சாதகமானதாகவே இருக்கும் என்பதனை தீர்க்கதரிசனமாகச் சிந்தித்த திலீபன், தன் சிந்தனையின் உண்மைத்தன்மையை உலகுக்கு உணர்த்த, தன்னுயிரையே களமாக மாற்றினான். ஒப்பந்தத்தின் பின் தோற்றம் பெற்ற நிலைமைகளைக் கருத்தில் கொண்டு உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நீர்கூட அருந்தாது, உண்ணாநோன்பினை ஆரம்பித்தான். நாட்கள் யுகங்களாகக் கழிந்தன. இந்திய ஏகாதிபத்தியமும் – பேரினவாதச் சிங்கள அரசும் தமது சுயரூபத்தைக் காட்டின. அண்ணல் காந்தியின் சாத்வீக போரினைக் கூறிக்கூறி அகிம்சையினை போற்றும் அரசாக அகிலத்தில் காட்டிக் கொள்ளும் இந்திய அரசு, அதே வழியில் போர்தொடுத்த ஓர் தமிழீழ மகனை சாகடித்தது.

இந்திய மாயையில் – எல்லாமே இந்தியாவால் தீர்க்கப்படும் என நம்பிய மக்கள், இந்தியச் சதியின் உள்ளார்த்தத்தைப் புரிந்து கொண்டனர். திலீபனின் தியாக மரணம், இந்திய வல்லாதிக்க சக்திக்கு எதிராகப் போராடி, தமிழீழத் தேசத்தைக் காக்கும் உத்வேகத்தையும் புத்துணர்ச்சியையும் தமிழீழ மக்களுக்கு பெருமளவில் ஏற்படுத்தியது. சுருக்கமாகச் சொன்னால், திலீபனின் ஆத்மபலம் – தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட பலமாக மாறி இந்திய வல்லரசின் படைகள் தமிழீழ மண்ணில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட மகத்தான சாதனை வரலாறாகியது.

திலீபன் திரும்பத் திரும்பக் கூறியது, *"தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லையேல் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்".* ஒப்பந்தங்கள் – பேச்சுவார்த்தைகள் – தீர்வுக் கோவைகள் – ஆலோசனைகள் – பல வந்து போயுள்ளன. இவையெதுவும் தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்கும் நீதியான – நேர்மையான தீர்வுகளாக இதுவரை இருக்கவில்லை. மாறாக, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையினை மறுக்கின்ற, அவர்களின் போராட்டத்தை நசுக்குகின்ற கருவிகளாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. உண்மையில் ஜனநாயக வழியிலான எல்லாவகையான தீர்வு முயற்சிகளும் தந்தை செல்வாவினால் மேற்கொள்ளப் பட்டபோதிலும், அவை இனவெறிகொண்ட சிங்கள அரசுகளால் நிராகரிக்கப்பட்டமையே வரலாறு ஆகும்.

ஆகவே தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து அவர்களின் மேல் ஆக்கிரமிப்பினை மேற்கொண்ட நிலையில் முன்னெடுக்கப்படும் எந்தத் தீர்வு முயற்சிகளும் உருப்படியாக இருக்க மாட்டாது மட்டுமல்ல, அவை தமிழ் மக்களின் வாழ்வை மேலும் உருக்குலைக்கும் என்பதை திலீபன் உணர்ந்தமையினாலேயே, தமிழ் மக்கள் எப்போதும் அரசியல் தெளிவுடன் விழிப்புடன் இருக்க வேண்டும் என எச்சரித்தான். இந்த எச்சரிக்கை எக்காலத்திற்கும் பொருந்தும்.

### காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷன்

**எ**மது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது. வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது. அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. இவையெல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீரசாதனைகள். ஆனால், எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது. வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து, ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழ போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டை தலைகுனிய வைத்த நிகழ்ச்சி. உலகத்தின் மனச்சாட்சியை சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தம் என்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக, மக்கள் எல்லோரையுமே எழுச்சிகொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது.

திலீபன் உங்களுக்காக இறந்தான். உங்கள் உரிமைக்காக இறந்தான். உங்கள் மண்ணுக்காக இறந்தான். உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான்.

தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த – உன்னத – தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால், உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதிவாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவுகடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக்கொண்டிருக்கும் போதெல்லாம் என் ஆன்மா கலங்கியது. ஆனால், நான் அவனைச் சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக்கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக்கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

– தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்கள்

www.tamilarangam.net

# 10வது ஆண்டு நினைவாக....

திலீபன் தான் நேசித்த மண்ணில் வாழ்கின்ற அனைவரும் தமது உரிமையினை மீட்பதற்கான பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும் என்பதில் ஆழமான விருப்புடன் வாழ்ந்தான்.

*ஆசைகள் – எதிர்பார்ப்புகள் என்பன பொதுநிலை நோக்கியதாக இல்லாது தன்னிலை நோக்கியதாக மாறும் பொழுது ஒரு மனிதனின் தூய்மை மாசுபட ஆரம்பிக்கும் என்பது திலீபனின் வாதம்.*

*இதனால் மகாகவி பாரதி கூறுவதுபோல், "முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும் மூண்டிருக்கும் இந்நாள் நிகழ்ச்சியும் நாளை நாடுறு பெற்றியும் தேர்கிலார் பேடிக்கல்வி பயின்றுபுல் பித்தர்கள்'* என நம்பிய திலீபன் தனது மருத்துவக் கல்வியையும் கைவிட்டு மக்கள் பணி செய்யக் களம் இறங்கினான்.

திலீபனுக்கு போர்க்களம் ஒரு அச்சத்திற்குரிய இடமாகத் தெரியவில்லை. போர்க் களமே நாம் தூய்மையாக இருப்பதற்கான புறத் தாக்கத்தினைத் தருகின்றது என்பதே அவன் கருத்து. "ஒவ்வொரு தடவையும் போர்முனையில் நிற்கும்போது வாழ்வின் பெளதீக நிலையின்மை நன்கு புரியும். தூய்மையுடன் மக்களுக்குச் சேவையாற்றும் எண்ணம் மேலும் வலுப்பெறும்" என்பது திலீபனின் துணிவு. போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல் என்பதனை நன்கு உணர்ந்த திலீபன், போராட்டத்தை மக்கள் மயப்படுத்துவதிலும் மக்களைப் போராட்ட மயப்படுத்துவதிலும் கடுமையாக உழைத்தான்.

தன்நிலை மட்டும் நோக்காது, பொதுநிலை நோக்கியதாகவும் தன் வாழ்வை அமைத்த திலீபன், 'தனக்காக வாழாது, மக்களுக்காக வாழ்பவரே உண்மையான ஆன்மீகவாதியென்ற எண்ணத்தை தன் செயலில் வெளிப்படுத்தினான். இந்தவகையில், திலீபன், மனிதனுக்கு உரிய எதனையும் ஒதுக்காது, அவற்றினை விடுதலை நோக்கித் திசை திருப்பும் தன்மையினைக் கொண்டிருந்தான்.



புதிய அர்த்தங்கள் – புதிய விளக்கங்கள் – புதிய திசையில் மக்களை ஒருங்கிணைக்கும் முயற்சிகள், இவைகளைத் தனது சமூகப் பணியின் உத்திகளாகக் கையாண்ட திலீபன், முழுமையான மக்கள் புரட்சி ஒன்றின் மூலமே தமிழீழம் மலரும் என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தான்.

**"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.**

**சுதந்திர தமிழீழம் மலரட்டும்"**

என விடுதலைக் கானம் பாடிய தியாக தீபம் திலீபன்,

**"மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின்,**

**தமிழீழம் உருவாகுவதை யாராலும் தடுக்க முடியாது"**

என உறுதியுடன் எடுத்துரைத்தான்.

மக்கள் புரட்சி என்பது, பரந்துபட்ட வெகுசனங்கள் ஒன்று திரண்டு எல்லாவழிகளிலும் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க உழைப்பதேயாகும்.

"நான் என்னுயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒருபெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழ வேண்டும். இங்கு ஒரு மாபெரும் புரட்சி வெடிக்கட்டும். மக்கள் அனைவரும் எழுச்சி அடைவார்களாயின், தமிழீழம் உருவாகுவதை யாராலும் தடுக்க முடியாது. எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது" தமிழீழ மக்களை நோக்கி திலீபன் விடுத்த இறுதிக் கோரிக்கை இதுவாகும்.

அனைத்து மக்களும் சகலவகையான அடக்குமுறைகளையும் எதிர்த்து ஓரணியில் திரண்டு மாபெரும் மக்கள் சக்தியாக மாறுவதையே, திலீபன், பரிபூரணமாகக் கிளர்ந்தெழுங்கள் என்றான். இந்தக் கிளர்ச்சி, முதலில் ஒவ்வொரு தமிழீழ இளம் சந்ததியின் உள்ளத்திலும் இடம்பெறல் வேண்டும். தன்னைத்தான் விடுவிக்காத மனிதனால் மற்றவரை விடுவிக்க இயலாது. நாம் எம்மைச் சுற்றிய சிந்தனைகளில் சிறைப்பட்டு நிற்கிறோம். இந்தச் சிறையில் இருந்து விடுபட்டு நமது சமுதாயம் சாவினை வென்று வாழ்வினைப் பெற உழைக்க வேண்டும். இது இலகுவான ஒன்றல்ல. சிங்களப் படைகளின் நெருக்குதல்களை, இன்னும் எத்தனையோ அடக்குமுறைகளை எதிர்த்துத்தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உழைக்க வேண்டிய நிலை உண்டு. இதற்கு உறுதியான உள்ளம் – போராட்டத் தலைமையின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கை – இரண்டும் முக்கியமானவை. திலீபனின் இறுதிப் பேச்சு, இது இரண்டையும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் பதிக்கும் அற்புத காவியம்.




திலீபன் இறுதியாக ஆற்றிய உரை நெஞ்சில் கனக்கிறது. **"அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அன்பான தமிழீழ மக்களே! அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்.**

**நிற்க வலுவில்லை. இருந்து கொண்டே பேசுகிறேன். நாளை நான் சுயநினைவோடு இருப்பேனோ தெரியாது. அதனால்தான் உங்களுடன் பேச வேண்டும் என விரும்பினேன். நாம் எமது இலட்சியத்தில் மிக உறுதியாக இருக்கின்றோம். ஏற்கனவே அறுநூற்று ஐம்பதுபேர் இலட்சியத்திற்காக மரணித்துவிட்டனர்.**

மில்லர் கடைசியாகப் பேசும்போது என்னிடம் ஒரு வரியைக் கூறினான். **"நான் எனது தாய்நாட்டிற்காக உயிரைக் கொடுக்கப் போவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், ஒரே ஒரு ஏக்கம். எனது மக்கள் விடுதலையாகும் காட்சியை என்னால் காண முடியாமல் போகிறதே"** *எனக் கூறவிட்டு, வெடிமருந்து வாகனத்தில் ஏறிச் சென்றான். எனக்கு முன்சென்ற அறுநூற்று ஐம்பது பேரும் எனக்குத் தெரியவே இறந்தார்கள். அவர்கள் எதற்காக மரணித்தார்கள் என்பதை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். நான் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாகத் தலைவரிடம் அனுமதி கோரியபோது, 'திலீபன் நீ முன்னால் போ! நான் பின்னால் வருகிறேன்.' எனக்கூறி எனக்கு உற்சாகமூட்டினார். அவ்வளவு தூரம் தெளிவான தலைவர்தான் – தனது உயிரையும் சிறிதும் மதியாத தலைவர்தான் எங்களுக்குக் கிடைத்துள்ளார். நான் தலைவரிலும் குறைவான நேரமே இப்போது இருந்துள்ளேன். இப்போது விளங்குகிறது எனக்கு என் தலைவரின் கொள்கைப் பிடிப்பு.*

*தாய்மார்களே! பெரும் வீரனின் தலைமையில் நீங்கள் கிளம்புங்கள்! ஓர் மக்கள் புரட்சி வெடிக்கட்டும். நாங்கள் நிச்சயமாகத் தமிழீழம் காண்போம். நான் அதை வானிலிருந்து எனது அறுநூற்று ஐம்பது தோழர்களுடன் சேர்ந்து பார்ப்பேன் என மனரீதியாக தற்போது நான் உணர்கிறேன். என் மக்கள் நிச்சயம் தமிழீழம் காண்பார்கள்.*

*எனது மக்களின் விடிவிற்காக, நான் பூரண மனத் திருப்தியுடன் இந்த உண்ணாவிரதத்தில் இறங்கினேன் எனக்கூறி உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.*

*விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில், தமது உயிரிலும் மேலாக இங்குள்ள மக்களை நினைக்கிறார்கள். தெளிவான - உறுதியான இலட்சியத்துடன் இருக்கிறார்கள். எமது இறுதி இலட்சியத்தைத் தலைவருடன் இணைந்து நீங்கள் அடைய வேண்டும் என்பதே எனது இறுதி ஆசை. வணக்கம்"*

உடல், உண்ணாநோன்பால் வலுவிழந்திருந்த நிலையிலும், திலீபன் உள உறுதியால் உதடசைத்துப் பேசிய பேச்சு ஒவ்வொரு தமிழ் நெஞ்சிலும் ஒரு அழைப்பை விட்டுச் செல்கிறது. அதுதான் தலைவருடன் இணைந்து தமிழீழம் காண உழையுங்கள் எனும் பெரும் அழைப்பு. திலீபன் வீரச்சாவைடைந்ததும் அவன் சிந்தனை விதைக்கப்பட்ட மண், விழிப்புற்று எழுந்தது.

'எளிமை – இனிமை – உருக்கு உறுதி' என்பனவே போராளிகளின் மூலக்கூறுகள் என வாழ்ந்துகாட்டி மாவீரரான தியாகி திலீபன் வரலாற்று ஆணையிடுகிறான். இதற்கு நாம் எவ்வகையில் பதில் அளிக்கப் போகிறோம். நாம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பார்வையாளர்கள் அல்ல, பங்காளிகள்.

பங்களிப்பு என்பது எமது காலத்தை – எமது சக்தியை – எமது உழைப்பை – எமது பணத்தை – எமது உடமை களை – ஏன் எமது உயிரையும் கூட தமிழீழத் தேசத்தை வென்றெடுக்கும் புனிதப் பணியில் அர்ப்பணிக்க ஆயத்தமாக இருக்கின்ற தன்மையாகும். ஆதலால்தான் அதனை **'தொப்புள் கொடி உறவு'** என்கிறோம். எம்மையும் விடுதலைப் போராட்டத்தையும் பிரிக்க முடியாது. இதை உணர்ந்து, திலீபனின் பாதையில் பயணிப்பதால் – பரிபூரணமாகக் கிளர்ந்தெழுவதால், மக்கள் புரட்சி வெடித்து – தமிழீழம் மலரும்.

இதுவே தியாகதீபம் திலீபனுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

**- ஆ. பற்றிமாகரன்**

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்




## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதினாறு

(தொடர்ச்சி)

**அ**தைப்பற்றித்தான் உங்களோடு கதைக்க வந்தேன். சில பிள்ளைகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் சில கர்ப்பிணிகளும் இருக்கிறார்கள்."

எனக்குத் தெரியும்........ எனக்குத் தெரியும்."

"எங்களை மேற் தளத்திற் கொஞ்ச நேரம் விடவேண்டும்"

கீழே கொத்தாகப் படர்ந்திருந்த மனிதர்களைக் காட்டியபடி பில் கேட்டான்.

"எங்கே இடம் இருக்கிறது.?"

"கொஞ்சப்பேரைத் தாமாகவே இடம்மாறச் சொல்லிக் கேட்டுப் பாருங்களேன்."

"இங்கே பார் அன்புக்குரியவளே, உனக்கு மறுப்புச் சொல்ல எனக்கு விருப்பமில்லை. ஆனால் என் தலைக்குள் பல சிக்கல்கள் அலைமோதுகின்றன. நீ சொல்வதைச் செய்வது அவ்வளவு லேசில்லை. இந்த ஓட்டைக் கப்பலிலே அப்படி ஆட்களை இடம்மாற்றிக் கொண்டிருக்க முடியாது. கரேனுடைய முகத்திலிருந்த மெலிதான அழகிய தன்மை குறைபடவில்லை. அவள் பேசியபோது அவள் குரலில் கோபம் சிறிதும் தொனிக்கவும் இல்லை.

"நான் இப்பவே கீழே போய் என் பிள்ளைகளை மேலே கொண்டு வரப்போகிறேன்." சொல்லிவிட்டு கரேன் திரும்பி நடந்தாள்.

"இங்கே வா..... இங்கே வா....... இப்படியொரு இனிமையான பிள்ளைக்கு இப்படிக் கோபம் எப்படி வரக்கூடும்...." தாடியைச் சொறிந்தபடி பில் தொடர்ந்தான். "சரி சரி நாங்கள் உன்னுடைய குழந்தைகளை மேலே கொண்டு வருவோம். எனக்குக் கிடைப்பதெல்லாம் ஒரே வாதாட்டம் தான்" சலித்துக் கொண்டான்.

> கடந்த நூற்றாண்டில் குறிப்பாக ரஷ்யா, போலந்து போன்ற நாடுகளில் யூதப்படுகொலைகள் அதிகரித்து இடம் பெற்றன. அதையடுத்து தாய்நாடு திரும்பும் உத்வேகம் நாடுகடந்த யூதர்களிடையே ஏற்பட்டது. 2–ம் உலக மகாயுத்தத்தின் போது ஹிட்லரின் நாஸி ஜெர்மனியில் 60 இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து 'தாயகம் நோக்கிய பயணம்' யூதர்களின் தாரக மந்திரம் ஆகியது.

அன்றிரவு கரேன் குழந்தைகளை கப்பலின் சுக்கான் பக்கத்துப் பகுதியில் ஓரிடத்துக்குக் கூட்டிச் சென்றாள். அங்கே தவழ்ந்து கொண்டிருந்த இனிமையான குளிர் காற்று விரைவாகவே அவர்களைத் தாலாட்டி அமைதியான ஆழமான தூக்கத்தில் ஆழ்த்தி விட்டது.

அடுத்த நாள் கடல் கண்ணாடிபோல் தெளிவாகவும், அமைதியாகவும், இருந்தது. விடிந்தபோது மேலும் ரோந்து விமானங்கள் வந்து சேர்ந்தன. இப்போது பழகிப்போய் விட்ட அவர்களின் "காவலுக்காக" வந்து கொண்டிருந்த டிவையன்சும், பிளாக்லியும் இன்னும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. "ஏறெற் இஸ்ரேல்" (Eretz Isreal) அதாவது இஸ்ரவேல் மண்ணிலிருந்து 24 மணி பயணத்தூரத்தில் இப்போது இருக்கிறோம் என்று பில் பிறை அறிவித்தபோது கப்பல் பூராகவும் இனம் புரியாத மகிழ்ச்சி அலையொன்று ஊடுருவிச்சென்றது. இதனால் ஏற்பட்ட மனநெகிழ்ச்சியில் பகல் வெகுநேரம் வரை கப்பல் அமைதியில் மூழ்கியது.

மாலையாகியபோது பிளாக்லி கப்பல் ஸ்டார்ஒவ் டேவிட்டை அணமித்து வந்தது. பிளாக்லியின் ஒலிபெருக்கியிலிருந்து பிரிட்டிஷ் தனமான குரலொன்று அலைகளை ஊடறுத்து, "குடியேற்ற முயற்சிக் கப்பற்காரர்களே! இது பிளாக்லியின் கப்டன் கன்னிங்ஹாம் (Cunningham) உங்கள் கப்டனோடு பேச விரும்புகிறேன்." என்று முழங்கியது.

"ஹலோ பிளக்லி, திருப்பி முழங்கிய பில் பிறையின் குரல் தொடர்ந்து "உனக்கு என்ன வேண்டும்" என்றது.

"உங்களோடு பேச ஒரு பிரதிநிதியை அனுப்ப விரும்புகிறோம்."

"இப்படியே பேசலாம் ஒரு ரகசியமும் தேவையில்லை."

"சரி நள்ளிரவுக்குச் சற்றுப் பின் நீங்கள் பலஸ்தீன கடல் பிராந்தியத்தினுள் பிரவேசிப்பீர்கள். அந்த சமயத்தில் உங்களைக் கைப்பற்றி, ஹைபாவுக்கு இழுத்துச் செல்ல உத்தேசித்திருக்கிறோம். நீங்கள் அதற்கு, எதிர்ப்புக் காட்டுவீர்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம்."

"அதற்கான அறிவுறுத்தல் எதுவும் எங்களுக்கில்லை." "நாங்கள் இழுத்துச் செல்வதை அனுமதிக்கப் போகிறீர்களா இல்லையா?"

"எங்கே கொண்டு போகப்போவதாகச் சொன்னீர்கள்?"

"ஹைபாவுக்கு"

"நாசமாய்ப்போக நாங்கள் வழிமாறி வந்துவிட்டோம் போலிருக்கிறது. இது ஒரு கிறேற் லேக் (Great Lake) உல்லாசப் படகு கப்டன்."

"நாங்கள் பலவந்தமாக உங்களைக் கைப்பற்ற வேண்டி வரும்."

"கண்ணிங்ஹாம்......" பில் கூப்பிட்டான்.

"சொல்லுங்கள்."

"உம்முடைய அதிகாரிகளுக்கும், மாலுமிகளுக்கும் சொல்லுங்கள்..... நீங்கள் எல்லோரும் இயன்றதைச் செய்யுங்கள்."

இரவு வந்தது. எவரும் தூங்கவில்லை. எல்லோரும் இரவின் கருமைக் கூடாக இஸ்ரவேல் மண்ணின் கரைகளைத் தேடிக் கொண்டிருந்தார்கள். எதுவுமே தெரியவில்லை. மூடுபனிமிருந்தது. நட்சத்திரங்களெதுவும் வானத்திலிருக்கவில்லை. கடுமையான அலைகளிலே ஸ்டார் ஒவ் டேவிட் நர்த்தனமிட்டவாறு சென்று கொண்டிருந்தது.

நள்ளிரவுக்குக் கிட்டவாகத் தோளிற் தட்டிக் கரேனைக் கூப்பிட்ட பால்மாக் தலைவன். "கரேன் என்னோடு கூடச் செலுத்தும் அறைக்கு வா" என்று அழைத்துச் சென்றான். அவர்கள் கீழே மல்லாந்தபடி படுத்திருந்த உடல்களுக்கிடையால் மெதுவாக நகர்ந்து சென்று செலுத்தும் அறையை அடைந்தனர். அவ்வறையும் கிட்டத்தட்ட இருபது பேர்வரையிலான பால்மாக் பகுதித் தலைவர்களாலும் மாலுமிகளாலும் நிறைந்திருந்தது. திசையறிகருவியின் மெலிதான நீல வெளிச்சத்தை விட வேறெதுவும் இல்லாமல் உள்ளே இருளாக இருந்தது. சுக்கான் சக்கரத்துக்குக் கிட்டவாக பில் பிறையின் பெரியளவு உடலின் நிழல் வடிவத்தை அவளால் அடையாளம் காண முடிந்தது.

"எல்லோரும் வந்து விட்டார்களா?"

"எல்லோரும் வந்து விட்டார்களா?"

"சரி எல்லோரும் கவனமாகக் கேளுங்கள். இரவின் கருமையினூடே ஒலித்தது பில் பிறையின் குரல். பால்மாக் தலைவர்களுடனும், எனது மாலுமிகளுடனும், பேசி ஒரு முடிவெடுத்திருக்கிறோம். பலஸ்தீனக் கரையோரமெங்கும் தற்போது கடுமையான மூடுபனி சூழ்ந்திருக்கிறது. எமது வேகத்தை 15 நொட்ஸ் மைல் வரை கூட்டித் தரக்கூடிய ஒரு மேலதிக இயந்திரம் வைத்திருக்கிறோம். இன்னும் இரண்டு மணித்தியாலங்களில் நாங்கள் பலஸ்தீனியக் கடற் பிராந்தியத்தினுள் இருப்போம். இந்தக் காலநிலைமை இப்படியேயிருந்தால், நாங்கள் ஒரு கடும் முயற்சி எடுத்து எங்களை நாங்களே,

**லியோன் யூறிஸ்**

சொறியாவுக்குத் (Cacsarea) தெற்கே கடற் கரையில் எங்கள் கப்பலைத் தரை தட்டச் செய்வோம்."

கிளர்ச்சியான முணுமுணுப்புகள் அறையெங்கும் பரவின.

"நாங்கள் அந்தப் போர்க் கப்பல்களிடமிருந்து தப்ப முடியுமா?" எங்கள் பயணம் முடியமுதலே அவர்கள் இந்தக் கப்பலைத் தண்டர்போர்ட் (Thundeird– வேகமான விமானம்) என்று நினைக்கப் போகிறார்கள்" பிறை திரும்பிச் சொன்னான்.

"ரடார் இருக்குமல்லவா? அவர்கள் எங்களை அதிற் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருப்பார்களே?"

"ஆமாம். ஆனால் அவர்கள் எங்களைத் தொடர்ந்து கரைக்குச் சமீபமாக வந்து குறுாய்சர் (Cruiser) ஒன்றைத் தரை தட்டப் பண்ணக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள மாட்டார்கள்."

"பலஸ்தீனத்தில் இருக்கும் பிரிட்டிஷ் படையணி பிரச்சினையில்லையா?"

"நாங்கள் கரையிலிருக்கும் பால்மாக்குடன் தொடர்பு எடுத்துள்ளோம். அவர்கள் எங்களை எதிர்பார்த்திருக்கிறார்கள். பிரிட்டிஷ்காரர்களுக்கு அவர்கள் ஒரு சுவாரஸ்யமான மாலைப் பொழுதைக் கொடுக்கப் போகிறார்கள் என எனக்கு நிச்சயமாகத் தெரியும். எல்லாப் பகுதித் தலைவர்களுமே கடற்கரையோரத் தரையிறங்கலைப் பற்றி லாசியோடாட்டிலேயே அறிவுறுத்தல்களைப் பெற்றிருக்கிறீர்கள். எதை எதிர்பார்க்க முடியும் என்ன செய்ய வேண்டும் என உங்களுக்குத் தெரியும்.... கரேனும் குழந்தைகட்கான மற்ற இரண்டு பொறுப்பாளர்களும் விசேட அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ள இங்கேயே நில்லுங்கள். வேறு ஏதாவது கேள்விகள் எதுவும் உண்டா? கேள்விகள் எதுவும் இருக்கவில்லை. ஏதாவது பேசித் தீர்க்க வேண்டியவை உண்டா?. எதுவும் இருக்கவில்லை.

"நான் சபிக்கப்பட்டு விடுவேன். அதிஷ்டமுண்டாகக் கடவுள் உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக."

**கா**ற்றினால் உந்தப்பட்ட பனிமூட்டமொன்று கைவிடப்பட்டிருந்த, புராதன துறைமுகமான பலஸ்தீனின் சொறியா வினூடாக வீசிச்சென்றது. கிறிஸ்து சகாப்தத்துக்கு முந்நூறு வருடங்களாக

### அத்தியாயம் பதினேழு

பாவனையிலிருந்த சுவர்த்தாவரங்களால் மூடப்பட்டிருந்த துறைமுகத்தின் சிதைவுகள், உடைந்த சுவர்கள் போன்றவற்றின் ஊடாகவும் வீசிச்சென்றது.

சீசார் (Caesar–சீசார் புகழ்பெற்ற உரோமச் சக்கரவர்த்தியின் பெயர்) அரசனைக் கௌரவிக்க ஏரோது அரசனால் நிர்மாணிக்கப்பட்ட இத்துறைமுக நகரம் ரோமானிய பலஸ்தீனத்தின் தலை நகராக நீண்ட ஐந்து நூற்றாண்டுகளாக விளங்கியது. இப்போது மீதிருந்ததெல்லாம் சிதைவுகளே. இரைந்தபடி வீசிக் கொண்டிருந்த காற்று, கடல் நீரைக் கலக்கி வெண் நுரையாக்கிக் கடலுக்குள் நீட்டிக் கொண்டிருந்த கற்பாறைகளில் தூக்கியடித்துக் கொண்டிருந்தது.

இங்குதான் பார்கொச்பாவுடன் ரோம எதேச்சாதிகார ஆட்சிக்கெதிராக துறவி அக்கிவாவினால் தூண்டப்பட்ட புரட்சி, இருபதினாயிரம் யூதர்களின் படுகொலையோடும், அக்கிவாவின் உயிர்த்தியாகத்தோடும் முடிவுக்கு வந்தது.

தொடரும்...

www.tamilarangam.net



# சிறுகதை




பூசாரி திடுக்கிட்டான். அவனுடைய இரத்தத்தை உறிஞ்சியது அந்தக் குரல். இருளின் மூர்க்கத்துடன் கூராகவும் கடும் வெக்கையாகவும் ஒலித்தது அது. அவனுடைய காதுகள் கருகிக்கொண்டு போகத் தொடங்கின. இருதயம் உருகி ஒழுகியது. அவனை அந்தக் குரல் அழைத்தது. மீண்டும் மீண்டும் அழைத்தது. மிகக் கடுமையான கர்ஜனையாக அந்த அழைப்பிருந்தது. அவனால் அசைய முடியவில்லை. குரல் அவனை நடுக்கிற்று.

மரத்தின் கிளைகள் முறிந்து அவன் மேல் விழுகின்றன. சாபம் பெற்றவன் போல அவன் எல்லாவற்றையும் தாங்கும் படியாக ஆகிவிட்டது. இருளில் விழிகள் அழிந்தன. பாரம் உயிரை நசுக்கியது. கத்தினான். ஊழையொலி அமுங்கிற்று. புயலின் சுழற்சியாகக் காற்று. தலைமுடியை பிய்த்து விடத்துடிக்கிறது சுழலும் வாயு.

பூசாரியின் குரல் திசைகளில் இறுகிப்போயிற்று. பற்கள் அழுகிச் சிந்துகின்றன. வாய் பிய்ந்து தொங்குகின்றது. எலும்புகள் உள்ளுக்குள் கரைந்து போகின்றன. கைகள் தொங்குகின்றன. விரல்களில் பூஞ்சணவன் படர்ந்துள்ளது. கால்கள் இற்றுப்போய் உழுத்த தடியாகி விட்டன.

தனக்கு நேர்ந்த கெடுதிகண்டு பூசாரி துயரமுற்றான்.

அவனுடைய வீடு அழிந்து விட்டது. ஊர் களவு போயிற்று. பிள்ளைகளைத் தெருக்கள் தின்று விட்டன. சொந்தங்கள் காடுகளில் உறைந்து போயின. அவன் மரநிழல்களில் அவிந்தான். வண்டி மாடுகளை களவு போன ஊரில் புழுக்கள் தின்று முடித்தன. எருதுகளின் சலங்கைகள் வளவில் சிதறிப்போய்க் கிடந்தன. அவற்றின் ஒலியோ மரங்களில் படர்ந்தது. அழிந்த வீட்டில் காகங்கள் படர்ந்திருந்தன கருமையாய். தானியங்களை குடித்த காக்கைகள் மரங்களிலும் மிஞ்சிய சுவர்களிலும் எச்சங்களால் படம் வரைந்தன. துக்கத்தால் கறுத்த மனசைப் பொத்தியபடி வெளியேறி ஓடி வந்ததே பெருங்காயம். கண்ணீர் பீறிடப் பீறிட அதைக் காப்பாற்றிவர விரிந்தது சாபம். ஈனத்தில் அவன் முனகிய துக்கக் குரல் காற்றில் அடர்ந்துள்ளது.

கோயில் வாசற்படியில் அவன் விழுந்து கதறியபோது சத்தத்தை உறிஞ்சிக் குடித்த வௌவால்கள் மிரண்டு பறந்தடித்தன. வௌவால்கள் சுவரில் மோதிய ஒலி காற்றில் அதிர்ந்தது. இருளில் பிறந்த சத்தமாக மர்மங்காட்டிற்று அது. தாயைக் கூவி அழைத்தான். துக்கம் முற்றிய அவன் குரல் கேவியது. கோயிலின் முற்றத்தில் நின்ற ஆலமரம் அவன் குரல் கேட்டுச் சிலிர்த்தது. அதற்கும் அவனிற்கும் மாறாத பிணைப்பு காலத்தை ஊடுருவி நீண்டிருந்தது. ஆலின் நிழலில் தன்னை அவன் கிடத்தியிருந்த நாட்களில் அவனைத்தொட்டு ஸ்பரிசிக்க விழுதுகள் துடிக்கும். ஒரு பக்கமாக வண்டி மாடுகளை விழுதுகளில் தொடுத்து விட்டிருப்பான். மாடுகளின் சலங்கை ஒலி விழுதுகளில் முடிச்சுகளிட்டிருந்தது. தாயின் குளிர்த்தி நாட்களில் ஆலமர நிழலில் சத்தங்கள் முளைக்கும்; காலடிகள் ஒளிரும். எருதுகள் மீதம்தள்ளிய வைக்கல் மணம் வேர்களூடாக பூமியின் மையத்திற்கு நகர்ந்தது. அவனின் அழுகுரலில் கோயில் முற்றம் கறுத்தது. கதவைத் திறந்து அழுதபடி உள்ளே ஓடினான். மண்டபத்தில் அழுகை வழிந்தது. சரவிழக்குகளின் ஒளி அழுகையில் கலங்கியது. காலடிச் சத்தங்களில் மோதிய வௌவால்கள் சுவரைத் தகர்க்கத் துடித்தன. பூசாரி தாயின் காலடியில் விழுந்தான். கண்ணீர் பெருகி அவள் கால்களில் சுவறியது. "தாயே" என்று அவன் கதறினான். சுவர்களை ஊடுருவி, வெளிமுற்றத்தில் பரவி, காலத்தில் பதிந்தது அந்தக்குரல். துக்கம் முற்றிய அந்தக் குரலில் வெம்மையிருந்தது.

"தாயே! பேசம்மா! எனக்கொரு வழிசொல்லம்மா நானென்ன செய்வேன்? ஐயோ எனக்கு நீயின்றி வேறுயார்?"

சொற்களின் அடர்த்தியில் விரிந்தது அளவற்ற துக்கம். அவன் இறைஞ்சுதல் தாயின் காலடியில் பரவியது. அழுகையொலியிலும் கண்ணீரிலும் அம்மனின் பீடம் கரைந்தது. வௌவால்கள் வெளிமுற்றத்தில் அலைந்தன. பிறகு சுழன்று ஆலில் ஒட்டித்தொங்கின. அவற்றின் விழிகளில் முற்றிய கலவரம்.

தாய் பேசவில்லை. அவள் கண்கள் தீயுமிழ்ந்தன. கோபம் கொப்பளிக்கும் முகத்தில் வெம்மை தகித்தது. பூசாரி நிமிர்ந்து பார்த்தான். ஆங்கார சொரூபியாய் அவள் நிமிர்ந்திருந்தாள். காலத்தில் அழியாத சிரிப்புடன்.

ஒரு நகரத்தை எரித்தவள் தேவி. முப்புரங்களை எரித்தவனின் வம்சம் அவள். அக்கிரமங்களை அவள் விட்டதில்லை. காலத்தில் அவள் வலிமை என்றும் தளர்ந்ததில்லை. சாஸ்வதமாய் அது படர்கிறது எங்கும், எப்போதும்.

பூசாரி அவள் வலிமையை வேண்டினான். இருளடரும் இக்காலத்தில் அவள் ஒளிக்கு அவன் உருகினான். உருகி உருகி மனங்களை கரைந்தான். மனங்கரைந்து ஓடிய நீரில் அவன் துக்க முகம் பிரதிபலித்தது. எண்ணங்களை உதிர்த்த மனம் வெறும் தகடாகிக் கிடந்தது.

திடீரென அவன் தன்னை நிறுத்தினான். துயரத்திலிருந்து தன்னை வெளியே பிடுங்கினான். மகிழ்ச்சியின் பிசிறல்களுமின்றி நிஷ்டையாக நின்றான். மனம் கூடி ஒரு நிலைப்பட்டது.

"தாயே நீதான் எல்லாவற்றுக்கு மானவள். நீயே பார்த்துக்கொள்".

அவன் படியிறங்கி முற்றத்தில் மிதந்தான். நிழல் முன்னகர்ந்து பின் தங்கியது.

தாய்மடி நீங்கி, அவள் முற்றம் விட்டு, தெருக்களில் தவறி, திசை ஏதுமின்றி, அடையாளங்குலைந்து, ஞாபகங்களுடன் அலைந்தான். தேங்கிய ஞாபகங்கள் குலைந்து குலைந்து மறுபடி எண்ணங்களை விரித்தன.

ஆலம் நிழல் சருகடைந்து உக்கத்தொடங்கியது. விழுதுகள் சருகுகளைத் துளைத்து மண் ணில் புதைந்தன. வைக்கல் மணத்தை உறுஞ்சிய ஆல் தன் ஞாபகங்களில் அதை மீண்டும் சுரந்தது. சலங்கைகளின் ஒலி அதன் கிளைகளில் ஒலித்தது.

கோயில் முற்றத்தில் காற்றுத் தன் தனிமையை வரிவரியாக எழுதிற்று. பூத்திருந்த காலடிகளை தன் நினைவுகளில் பாடமாக்கி வைத்திருந்தது முற்றம். மண்டபத்துள் வௌவால்கள் பெருகின. இருளில் பிறக்கும் ஒலிகளில் பறந்து அவை சுவர்களில் மோதின. ஈரம் சுவறிய தேவியின் பீடங்களில் பாசி நிறம் பூசியது. தேவியின் கண்களோ தீயில் ஒளிர்ந்தன. அவள் ஆங்கார சொரூபி. முகத்தில் கோபக்கனல். ஒரு நகரை எரித்தவள். அக்கிரமத்தை அழித்தவள் அம்மன். அவள்தாய் காலத்தில் வல்லமை அழியாதவள்.

பூசாரியின் ஞாபகங்கள் மிஞ்சித் துக்கத்தை பெய்கின்றன. அள்ளி வந்த நினைவுகளில் அவன் தேய்ந்தான். தேவியின் சிலம்பு, தண்டை, பிரம்பு எல்லாம் பூட்டிய பெட்டகத்துள். பூட்டிய பெட்டகமோ களவு போன ஊரில். களவு போன ஊரோ அவனது நினைவறையில்.

ஞாபகங்களில் ஒரு புழுவாய் நெளிந்தான் பூசாரி.



சாகசமூட்டிய கனவுகள் அவனைத்தனியே விட்டன. யாருமற்ற வெளிகளில் தெளிவற்ற குரல்கள் அவனை அழைத்துச் சென்றன. தேவியின் கரம் பற்றி நடப்பதான உருக்கத்தில் மெய்சிலிர்த்தது. காலம் அவனைக் குலைத்துக் குலைத்து இழையாக்கியது. தன் நிழலைக் கொண்டே நடக்கமுடியாதிருந்தான். மகிமை எண்ணங்களோ ஒளியூட்டின. ஒலியின் ஊஞ்சலில் மெய்மறந்தான்.

தூக்கம் தேங்கிய கண்களில் பறவைகள் கனவுகளை வரைந்தன. வரையப்பட்ட கனவுகள் ஒரு பெருஞ் சித்திரமாக வளர்ந்து நிறங் கொண்டன. சித்திரத்தின் சிலைகள் முளைத்து உயிர்பெற்று அசைந்தன. அசையும் சிலைகளும் உறையும் சிலைகளுமாக மாறிய காட்சியில் ஊர் வடிவங்கொண்டது. ஊரின் முகத்தில் கோயில் நிழலாடியது. ஆலமரத்தில் சலங்கைகள் ஒலிக்கின்றன. விழுதுகளின் ஊஞ்சலில் வண்டிமாடுகள் தலையசைக்கின்றன. நிழல் பெருகிய ஆலின் மடியில் ஈரம் மலர்ந்திருந்தது. காலடி பூத்துப்பெருகிய முற்றம். முற்றத்தில் மையமாக படம் விரித்த கோயில். தேவி ஒளிர்ந்தாள். காலமாய் விரியும் அவள் புன்னகை. மண்டபத்தின் தூண்கள் ஒளியில் மினுங்கின. தூண்களில் தேங்கிய இடும்பனும் இடும்பியும், துவாரபாலகர், மற்றும் பரிவாரங்களும் அசைந்தனர். தேவி சிவந்தாள். மண்டபம் சிவந்தது. ஒளி உருகிக் குருதியாகியது. கண்களில் தீ பறந்தது. சிலம்புகள் குலுங்கின. சிலம்பின் ஒளியில் மண்டபம் அதிர்ந்தது. முற்றம் நிறைந்து வெளியெல்லாம் பரவி காற்றில் ஏறி சுழன்று சுழன்று ஒலித்தது.

தாயின் கையில் பிரம்பு, தூக்கிய கால்களில் துடிப்பு, தாவும் முனைப்பு.

துவார பாலகர்கள் பரிவாரங்களுடன் அணிவகுத்தனர். தேவி முற்றத்தில் தாவினாள். இடும்பனும் இடும்பியும் குதித்தனர். காற்றில் படர்ந்து பிரம்பைச் சுழற்றினால் தாய். காதுகள் கிழிபடும் ஓசை. ஆல் சுழன்று தவித்தது. மண்பெயர்ந்து திசைகளில் அடர்ந்தது. பிரம்பு சுழலும் ஒலியில் காற்று பிளந்து துடித்தது.

"ஹா........ செல்லையா, ஹா... ஹா நான் தான்.... நானே வந்திருக்கின்றேன்.. வா.... என்னோடுவா... உனக்கினி அச்சமில்லை.. வா... ஹா... ஹா..."

பூசாரி அதிர்ந்துறைந்தான். கால்களை பூமி நடுங்க வைத்தது. வரட்சி தின்றது தொண்டையை. கண்களில் நீர் வழிய அவன் தேவியின் காலடியைத் தேடினான்.

அவள் காற்றில் சஞ்சரித்தாள். பூசாரியைக் காற்று அலைக் கழித்தது.

"தேவி .......... தாயே! வந்து விடுகிறேன்" அவன் குரல் காற்றில் பரவி துடித் தழிந்தது. கைகளை உயர்த்தி காற்று வெளியில் அளைந்தான்.

சிலம்பின் ஒலி பிரம்பின் வீச்சு

காற்றின் சுழற்சி உடுக்கின் உறுமல் பாறையின் அதிர்வு

தேவியின் தாண்டவத்தில் திசைகள் நடுங்கின.

பெருகிய அணியில், பூசாரி பிணைந்தான். தன்முனைப்பில் கத்தினான். அவன் குரல் ஊறிப் பெருகிற்று. அது திசைகளில் மோதி அவிழ்ந்தது. பற்கள் இறுகின. உதடுகள் துடித்தன. நரம்புகள் முறுகிச் சூடேறின. புஜங்கள் திரண்டவெளியில் விரிந்தன. கைகளில் மதம் பிளிந்தது யானை. கால்களில் விருட்சங்கள் முறுகின. முகத்தில் சூரியன் சிவந்தான்.

பூசாரியின் குரலில்–

குதிரையின் கனைப்பு

யானையின் பிளிறல்

சிம்மத்தின் கர்ஜனை

புலியின் உறுமல். ❑❑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# துயர்துடைப்புத் திட்டங்களும் அவற்றைச் செயற்படுத்தும் வழிவகைகளும்

**சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பான விளைவுகள்**

* பசி, பட்டினியுடனான மக்கள் வாழ்க்கை அதிகரிப்பு
* இறப்பு வீதம் அதிகரிப்பு
* நோய்த்தாக்கங்கள் அதிகரிப்பு
* பாடசாலை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவு
* போசாக்கு குறைபாடு அதிகரிப்பு
* குழந்தைகளின் பிறப்பு வீதத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் அதிகரிப்பு
* விவசாயம் உட்பட்ட உற்பத்திகளின் வீழ்ச்சி
* தொழில் வளங்களும் தொழில் வாய்ப்புக்களும் குறைந்து தொழில் இழப்புக்களும் அதிகரிப்பு
* அபிவிருத்திச் செயற்பாடுகளின் பாதிப்புக்கள் அதிகரிப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகள் குறைவு
* சந்தைப்படுத்தல் பிரச்சனைகள் அதிகரிப்பு
* அத்தியாவசிய, அடிப்படைப்பொருட்களின் விலையேற்றம் அதிகரிப்பு
* ஒட்டுமொத்தமாக சமூகத்தின் வாழ்வு நிலைகளும் வாழ்வு இயக்கத்திலும் ஏற்பட்ட பாதிப்புகள் அதிகரிப்பு

**துயர்துடைப்பு முகாம் செயற்பாட்டுக்குழு**

கல்வி - பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்
முன்பள்ளி இணைப்பாளர்,ஆசிரியர்கள்
கல்விச்சேவை நிலைய இணைப்பாளர்கள்
ச/பொ/அ/குழு -கல்வி

சுகாதாரம் - மருத்துவ மாதுக்கள்
சுகாதாரத் தொண்டர்கள்
ச/பொ/அ/குழு - சுகாதாரம்
பிரதேச சபை பணியாளர்

வீடமைப்பு - என் ஜீ ஓ இணைப்பாளர்கள்
-என் ஜீ ஓ நிர்வாகமும், பணியாளர்களும்
-ச/பொ/அ/குழு - வீடமைப்பு
-கிராம சேவகர்கள்

விவசாயம் - தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகமும் பணியாளர்களும்
உற்பத்திக் குழுக்கள்
ச/பொ/அ/குழு - விவசாயம்
விவசாயத்திணைக்கள அதிகாரிகள் (பணியாளர்கள்)

தொழில் -என் ஜீ ஓக்கள் - சுயசார்புக்குப் பொறுப்பானவர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், ச/பொ/அ/குழு - தொழில்

புனர்வாழ்வு -என் ஜீ ஓ பணியாளர்கள்
ஜீ எஸ் ஓ (கிராம சேவகர்கள்)
கூட்டுறவு( எம் பீ சீ எஸ்)
நிர்வாக சேவை பணியாளர்கள்
ச/பொ/அ/குழு - புனர்வாழ்வு
பரப்புரைப் பிரிவு

பொது விடயம் - என் ஜீ ஓ ஓ
நிர்வாக சேவை
ஆர்/ டீ/ எஸ்(மாதர் சங்கம்/ஆலய சபை/ விளையாட்டுக்கழகம்/ கூட்டுறவு அமைப்பு பொது அமைப்புக்கள் - பிரதேச சபை/வரத்தக சங்கம்
ஜீ எஸ் ஓ (கிராம சேவகர்கள்)
பரப்புரைப்பிரிவு

**துயர் துடைப்புத்திட்ட மேற்பார்வை கண்காணித்தல் குழு**

* தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
* தமிழீழ நிர்வாக சேவை
* தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம்
* பிரதேசச் செயலாளர்
* சுகாதாரத் திணைக்களப் பணியாளர்
* கோட்டக்கல்விப்பணிப்பாளர்
* விவசாயத் திணைக்களப் பணியாளர்
* பிரதேச சபைப்பணியாளர்
* கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியப் பிரதிநிதி
* அரச சார்பற்ற நிறுவன இணையப் பிரதிநிதி
* வட்டப் பொறுப்பாளர்
* பரப்புரைப் பிரிவுப் பிரதேசப் பொறுப்பாளர்
* பொது அமைப்புப் பிரதிநிதி

**செயற்திட்டம் செயற்பாட்டுக்குழு**

- கிராம பிரதேச மட்டத்தில் அமைத்தல்
- கிராம பிரதேச மட்டப்பொறுப்பாளரை நியமித்தல்
- துறை சார்ந்த பொறுப்பாளர்களை நியமித்தல்
- கிராம, பிரதேச மட்ட வாராந்த ஒன்று கூடல் அவசியமாகும்

மேற்பார்வை, கண்காணித்தல் குழு, - மாதம் இரு தடவை( இரு வாரத்திற்கு ஒரு தடவை) ஒன்று கூடல்

துயர்துடைப்பு முகாம் பொறுப்பாளர்கள் வாரம் ஒரு தடவை ஒன்று கூடல்

**துறை சார்ந்த செயற்திட்டங்கள்**

**கல்வி**

- பாடசாலை செல்லாத மாணவர்களை இனம் கண்டு அம்மாணவர்களுக்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- பாடசாலைத் தேவைகளை நிறைவேற்றுதல் முன்பள்ளித் தேவைகளை நிறைவேற்றுதல்
- கோட்ட மட்ட/மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுக்களை பலப்படுத்தல்

**சுகாதாரம்**

- போசாக்கு நிலையங்களை பலப்படுத்தல்
- தொற்று நோய்ப்பிரதேங்களை இனம் கண்டு நோய் அழிக்கும் நடவடிக்கை
- போசாக்கற்றவர் இனம் காணல்
- ஆரம்ப சுகாதார நடவடிக்கைகள்/தாய் சேய் நலச்செயற்பாடுகள்
- சித்த ஆயுள்வேத வைத்திய முறைகளை மேம்படுத்தல்

பிரதேச/மாவட்ட மட்ட சுகாதாரக்குழுக்கள் பலப்படுத்தல்

**வீடமைப்பு**

- வீட்டுத்திட்டப் பராமரிப்பு
- சேரிப்புறம் அகற்றல்
- குடிநீர்த் தேவை நிறைவேற்றல்

**விவசாயம்**

விவசாய/கால்நடை வளர்ப்புத் தேவைகளை நிறைவேற்றுதல்

**தொழில்**

- வியாபாரம்/ கைத்தொழில்/கடற்தொழில்/ தேவைகளை இனம் கண்டு நிறைவேற்றுதல்
- மாவட்ட விவசாயக்குழு பலப்படுத்தல் (பிரதேசம் உட்பட)

**புனர்வாழ்வு**

- நிவாரண வழங்கல் ஒழுங்கு விடயங்கள்
- மரணக் கொடுப்பனவு
- சமூக மட்டத்தேவைகள் நிறைவேற்றுதல்
- இடம்பெயர்ந்தோர் பராமரிப்பு

**பொது**

- உணவுடனான வேலைத்திட்டம் மேற்கொள்ளல்
- பொதுத் தேவைகள் இனம் காணல்


**அன்பார்ந்த தமிழ் மக்களே!**

சொந்த மண்ணில் எம் மக்களின் நொந்த நிலையை எண்ணிப் பாருங்கள். காலத்தின் தேவையை அறிந்து இன்று நாம் அவர்களுக்கு உதவத்தவறின், எம் இனத்திற்குப் பெரும் துரோகம் இழைத்தவர்கள் ஆவோம். சிறு துளி பெரு வெள்ளம். இன்னலுறும் எம் மக்களுக்கு நாம் அளிக்கும் சிறிய அளவு பணம் அவர்களின் நல்வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும். எனவே தாமதியாது உதவுங்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு
**தமிழர் புனர்வாழ்வுக்கழகம்**
(பிரித்தானிய கிளை)
Registered Charity No: 1010029
79 Hoe Street, Walthamstow,
London E17 4SA
**தொலைபேசி இல: 0181 - 520 5876**



நம்மவருக்கு உதவிடவும் நல்லிசையில் மகிழ்ந்திடவும் வாருங்கள் வாருங்கள்

இன்னிசைத்திலகம் - சங்கீத பூஷணம்
**பொன் சுந்தரலிங்கம் அவர்களது**
**கர்நாடக இன்னிசைக் கச்சேரியும்**
**தமிழின எழுச்சிப்பாடல்களும்**
இடம்:Plashet School - North Hall
Plashet Grove, East Ham, London E6
நாள்: 28.09.97 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 6.30 மணி
மேலதிக விபரங்களுக்கு
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
தொலைபேசி: 0181 - 520 5876


**தமிழர் புனர்வாழ்வுக்கழகங்களின் சர்வதேச அமைப்புக்களின் தொலைபேசி இலக்கங்கள்**

| | |
|---|---|
| TRO Canada: | Ph: (1416)463 7647 |
| TRO Denmark: | Ph: (4520)23 88 97 |
| TRO France: | Ph((331 46) 489 850 |
| TRO Germany: | Ph: (4921) 665 8508 |
| TRO U.K.: | Ph: (44181) 520 5876 |
| TRO Italy: | Ph; (39 91) 611 3179 |
| TRO Malaysia: | Ph: 603 255 2472 |
| TRO Netherlanl | Ph: 31 72 644 442 |
| TRO New Zealand ; | Ph: (649) 537 0258 |
| TRO Norway: | Ph: (47 22) 646 592 |
| TRO South Africa: | Ph: (27 471) 310 123 |
| TRO Sweden: | Ph: (4686) 870 649 |
| TRO Switzerland: | Ph: (41 41) 260 8398 |
| TRO U.S.A. | Ph: (0 1 301)729 2722 |
| TRO Australia: | Ph:Fax:(613) 9800 3899 |

www.tamilarangam.net



# அவசரமும் அவசியமுமான வேண்டுகோள்.

**எதிரியின் இன அழிப்பில் இருந்து மக்களைக் காப்பாற்ற வாரி வழங்குங்கள்.**
**உணவுத் தடையை உங்கள் கரங்கள் உடைக்கட்டும்!**

**அன்பான தமிழீழ மக்களே !**

சரியான வழிநடத்தலோடு தமிழீழ மலர்வை நோக்கிய வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லுகின்ற, உலகமே வியக்கும் தலைமை நம்மிடம் உண்டு. உயிரை விலையாகக் கொடுக்கத் துணிந்த உறுதிமிக்க போராளிகள், நமது சொந்தங்களைக் காப்பாற்றி, மண்ணை மீட்கும் பணியில் வீரமிகு தியாகங்களைப் புரிகின்றனர். நமது தாயகத்திற்கான கடந்தகால முனைப்புகளையும் முன்னேற்றங்களையும் ஆய்வு செய்யும் போர் வல்லுனர்கள், தமிழீழ மக்களின் எழுச்சி அடக்க முடியாதது எனவும், சிங்கள இராணுவப் படையெடுப்பையும் சக்தி மிக்க அயல்நாட்டு எதிர்ப்பையும் முறியடிக்கும் மதிநுட்பம் நிறைந்த நகர்வு புலிகளின் தனித்துவம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். எமது தரைவழி – கடல்வழிப் போர்த் தந்திரோபாயங்கள் குவித்துள்ள வெற்றிகளும் சிங்கள இனவாத இராணுவப் பின்னடைவுகளும் சரியாகத் திட்டமிட்ட – திறமைமிக்க – துணிவான எமது நடவடிக்கைகளின் பெறுபேறாகும்.

அதே வேளை, சிங்கள இனவாத அரசின் கபடத்தனமான அணுகுமுறைகள் நமது இனத்தையே இலங்கைத் தீவில் இருந்து அழித்து விடும் சூழ்ச்சிகள் நிறைந்தனவாகவே உள்ளன. உள்நாட்டுப் போர் மரபையும், உலகப் போர் விதிகளையும் மீறி மக்களைக் கொன்றொழிக்கும் வெறிபிடித்த செயலை சிறிலங்கா அரசு செய்து வருகின்றது. அனைத்துலக கண்டனங்களுக்கும் செவிகொடாமல் சிங்கள இராணுவம் நடாத்தி வரும் கொடூரமான மனிதப்படுகொலைகள் இதற்கு சான்றாகும்.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திற்கான பாதை திறப்பு என்பது, நமது தமிழீழத்திற்கான தடைக்கல் மட்டுமல்ல. அது சிங்கள இனவாத இராணுவத்தின், தமிழினப் படுகொலை அட்டூழியங்களுக்கான, வசதிகள் நிறைந்த கொலைக்களத்தின் வாசலாகிவிடும் என்பதே உண்மை. வடபுலத் தமிழர் நிலப்பரப்பை, பௌத்த சிங்களக் குடிமிருப்பாக்கும் சதியின் ஒரு பகுதியே பாதை திறப்பு முயற்சியாகும். இதனைக் கருத்திற் கொண்டுதான் எமது மக்களுக்கு வர்விருக்கும் பயங்கரமான அழிவை உயிர் கொடுத்து முறியடித்து நிற்கின்றனர் எமது போராளிகள்.

அப்பாவி மக்களின் மேல் குண்டுகளைப் போட்டு இடம்பெயர்வுகளை உண்டு பண்ணி இராணுவ நகர்வுகளை முடுக்கிவிட்டுள்ள இனவாத அரசு, மனித உரிமை மீறல்களின் மற்றுமொரு நடவடிக்கையாக, இடம் பெயர்ந்த மக்களின் மேல் உணவுத்தடையையும் மருந்துத் தடையையும் விதித்து, பட்டினிச் சாவுகளையும் ஆரோக்கியமற்ற சமுதாயத்தையும் உண்டுபண்ண முனைகின்றது.

**அன்பானவர்களே,**

இராணுவ நகர்வுகளிலிருந்து மக்களைக் காப்பாற்றும் அதே வேளையில், பட்டினிச்சாவிலிருந்தும் நமது மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மிக்க பணி நமக்குண்டு.

மக்களைக் காப்பாற்றுவதற்காக உயிரைக் கொடுக்கத் துணிந்த படை நம்மிடம் இருக்கின்றது. பல நாடுகளிடம் கடன் வாங்கி ஆயுதங்களைக் குவித்துள்ள சிங்கள இராணுவ ஆயுத பலத்திற்கு ஈடுகொடுத்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய இறுக்கமான காலகட்டம் இதுவாகும்.

இடம் பெயர்ந்துள்ள எமது மக்களை நம்மாற் கவனிக்க முடியாமற் போனால், மீண்டும் அவர்கள் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளுக்குள் அகப்பட்டு அழியும் அவலம் ஏற்படும். எமது மக்களின் மரணத்தைத் தடுத்து நிறுத்த வேண்டியது நமது கடமையாகும்.

இந்த இரண்டு, ஒத்திப்போடமுடியாத, அவசரமான முக்கிய காரணிகளுக்காகவும், வாரி வழங்கி, எமது மக்களைக் காப்பாற்றி, ஆக்கிரமிப்புப் பாதங்களை தமிழீழ நிலப்பரப்பில் இருந்து அகற்ற உதவுமாறு உரிமையுடன் கேட்கின்றோம். வேண்டுகோளின் அவசியத்தைப் புரிந்து கொண்டு வழங்கும் உங்களது பங்களிப்பு, தமிழீழ மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் என்ற பாரமான உண்மையை மனதிற் கொள்ளுங்கள்.

நன்றி. பிரச்சாரப் பிரிவு

**தமிழீழ விடுதலைப் புலிகள். யேர்மனிப் பணியகம் , 20- 09 - 97**

# பகற்கனவுகள்

சிங்கள ஆட்சியாளர்கள் அதிக சமயங்களில் பகற்கனவு காண்பதும் உண்டு. பெரும்பாலும் அதுபற்றிப் பேசுவதும் உண்டு. இந்தவகையில் அமைந்ததே ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசாங்கத்தினரும் தமிழ் மக்களைத் தாம் விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து காப்பாற்ற முயல்வதாகவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை தமிழர்கள் ஆதரிப்பதாகவும் கூறிக் கொள்வதாகும். ஆனால், இது தொடர்பான உண்மைநிலையை– அண்மையில் யாழ் சென்று திரும்பிய சிங்களப் பத்திரிகையாளர்களே வெளிக் கொண்டு வந்துள்ளனர். யாழ் மாவட்டத்தில் உள்ள பெரும் பான்மையான மக்கள் சந்திரிகா அரசாங்கத்தினால் முன் வைக்கப் பட்டுள்ள இனப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளாததுடன், எதிர்க்கின்றனர் எனச் செய்தியாளர்கள் தமது நேரடி அனுபவத்தில் கண்டதை தெரிவிக்கின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தொடக்கி வைத்தவர்கள் தமிழ் மக்கள். சாத்வீகமான முறையில் அவர்கள் தமது போராட்டத்தை தொடக்கி – தொடர்ந்து அதில் தோல்வி கண்ட பின்னர் ஆயுதப்போராட்டமே இதற்கு ஒரேவழி என முடிவு செய்தனர். இதில் விடுதலைப் புலிகளது பங்கானது, மக்கள் தமது ஆயுதப் போராட்டத்தை தொடங்கத் தயாராக வந்தபோது அதற்கு தலைமை தாங்கி நடத்துவிக்க முற்பட்டமையாகும். இந்த நிலையில் விடுதலப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பு என்றும் சிங்கள இராணுவத்தை தமிழ் மக்களை இரட்சிக்க வந்த தேவதூதர்கள் எனக் காட்ட முனைவதும் சந்திரிகா அரசின் போலித்தனமான கூக்குரலே. ஆதாவது, யாருடைய ஒடுக்கு முறைக்கு எதிராகத் தமிழ் மக்கள் ஆயுதம் தாங்கிப் பேராட முற்பட்டார்களோ, அவர்களையே தமிழ் மக்களின் இரட்சகர்களாகக் காட்டவிழைவது வேடிக்கையானதாகும். அத்தோடு சந்திரிகா அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள அதிகாரப்பரவலாக்கல் திட்டத்திற்கு மக்களிடம் ஆதரவு உள்ளதெனக் காட்ட முனைவதானது, பிரச்சார நிறுவனங்கள் தங்கள் கைகளில் உள்ளதென்ற தைரியத்தினால் செய்யமுனையும் மோசடி நடவடிக்கையாகும். ஏனெனில், இந்த அதிகாரப்பரவலாக்கல் திட்டம் என்பது என்னவென இதுவரை அரசாங்கத்தரப்பினாலேயே தெளிவாக வரையறுத்தம் செய்யப்படவில்லை. அத்தோடு இவ்வதிகாரப் பரவலாக்கம் குறித்து தமிழ் மக்களுக்கு எதுவும் தெரிந்ததாக இல்லை. அத்தோடு, யாழ் மாவட்ட ஆயர் அருள் திரு. தோமஸ் சௌந்தர நாயகமும் அண்மையில் சுட்டிக்காட்டியுள்ளார். சந்திரிகா அரசாங்கம் முன்வைத்துள்ளதாகக் கூறப்படும் அரசியல் தீர்வு திட்டம் குறித்து தமிழ் மக்களுக்கு எதுவும் தெரியாது என அவர் தெரிவித்ததோடு, அவ்வாறு ஒரு தீர்வுத்திட்டம் கொண்டு வரப்பட வேண்டுமானால் அது தமிழ் மக்களினதும் விடுதலைப்புலிகளினதும் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். இந்த வகையில் சந்திரிகா குமாரதுங்காவும் அவரது பேரினவாத அரசும் கூறிக்கொள்கின்றது என்பதற்காக விடுதலைப் போராளிகளான புலிகள், பயங்கரவாதிகளாகவோ அன்றி தமிழ் மக்கள் புலிகள் இன்றி இனப்பிரச்சினை ஒன்றுக்கு ஒப்புக் கொள்வார்கள் என்றோ யாராவது கனவு கொண்டிருப்பார்களேயானால் இதில் அவர்கள் தோல்வியடைவார்கள் என்றே கூறலாம். ஏனெனில், இராணுவ ஆக்கிரமிப்புக்குள் மக்களைக் கொண்டு வருவதினால் அவர்கள் தமது உணர்வுகளை இழந்து விடுவார்கள் என்றோ, அச்சம் காரணமாக திணிப்புக்களை ஏற்றுக்கொள்வார்கள் என்றோ எண்ணுவது மடமையாகும்.

ஆனால், சந்திரிகா அரசாங்கமோ தனது பிரச்சார ஊடகங்களின் உதவியுடன் ஓர் ஆக்கிரமிப்பு இராணுயுவத்தை ஒரு விடுதலை இராணுவமாகக் காட்டிவிடலாம் என முனைகின்றது. ஆனால், அது சாத்தியமாகாது. அத்தோடு, தமது உரிமைக்காகப் போராடப் புறப்பட்ட மக்கள் மீது இராணுவத்தினரின் துணையுடன் திட்டம் எதையும் திணித்து விடமுடியாது. ஏனெனில், எதற்கும் தயாரான நிலையிலேயே ஒரு மக்கள் கூட்டம் தமது இறுதிக்கட்ட நடவடிக்கையாக ஆயுதப் போராட்டத்தைத் தெரிவு செய்கின்றது. ✷

## துயர்துடைக்கும் பணியில் பத்து நாட்கள்

**புனர்வாழ்வு நிதி 97**

**03 . 10 . 97 - 12 . 10 . 97**

"எங்கள் அமைப்பை நாமே பலப்படுத்துவோம்
தொப்புள் கொடியுறவு தொலையாதென நிரூபிப்போம்
எம்மக்கள் துயர்துடைக்கும் பணியில் ஒன்றிணைவோம்"

எமது ஒருநாள் ஊதியம் ஒரு மழலையின் மறுவாழ்வு

*நிதிசேகரிப்பு : ஆரம்பம் 03 . 10 . 97 சனி காலை 10.00 மணி*

தொடர்புகளுக்கு : தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (நோர்வே)

ஒஸ்லோ ☎ 22717537 பேர்கன் ☎ 55296929
துரோண்யம் ☎ 73913942 ஸ்ரவங்கள் ☎ 51860997

## தளிர் மாலை 97

6.9.97 அன்று நடைபெறவிருந்த இளவரசி டயானாவின் இறுதி ஊர்வலம் காரணமாகப் பிற்போடப்பட்ட நிகழ்ச்சி 27.9.97 அன்று நடைபெற உள்ளது

**இடம்**

**HIGHBURY GROVE SCHOOL**
**HIGHBURY NEW PARK**
**LONDON N5 2EG**

Nearest underground: HIGHBURY & ISLINGTON

காலம்

27 - 09 - 97

சனிக்கிழமை

மாலை 5.30 - 10.30 வரை

www.tamilarangam.net






## வஞ்சகம் வென்றாய்

உன்னுயிர் வாழக் கெஞ்சியது, உயிரை
உதைத்தே தள்ளி வஞ்சகம் வென்றாய்
நாடித் துடிப்படக்கி - யாரது
நாடி நீ பார்த்தாயோ?
விழிகளை பஞ்சடைத்து - ஈழத்தின்
வழிகளைத் திறந்தாயே!
பிரியும் வேளையிலும் பேசிய ஒவ்வொன்றும்
பயிராய் முளைத்திருக்கு அறுவடைக்குக்
காத்து!

-நடராஜா சந்திரகுமார், சுவிற்சலாந்து.

## தன்னுயிர் மறந்தான்

தண்ணீர் மறந்தான்-
தன்னுயிர் மறந்தான்-
தலைவனை நினைந்தான்.
தாயை மறந்தான்-
தாயகத்தை நினைந்தான்.
உன்னை மறப்போர்
உலகில் உண்டோ
தியாகியே திலீபனே!

-திருநெல்வேலிச் சிவகுமார்,
யேர்மனி

## ஒளி தந்த தீபம்

தியாகத்தின் சிகரத்தை தொட்ட திலீபனே!
உன் உடலை மெழுகாக்கி
எம் மண்ணுக்கு ஒளிதந்தவனே!
தலைவனின் பாதை ஏற்றாய்
பாரதத்தின் முகமூடி கிழித்தாயே
அன்னம் தண்ணி உண்ண மறந்தாய்
தாயகம் துடித்தது அன்று
இங்கு நீ மட்டும் இல்லையே திலீபா!

- லே. ராஜன் (மணற்காடு), இத்தாலி.



## ஆத்ம வேள்வி

ஆதிக்க அரக்கர்க்கு
காலக்கெடு விதித்த தமிழா
இந்தியப் படையை அகிம்சையால்
எதிர்த்த தலைவனின் தம்பியே!
அடிமை விலங்குடைக்க
உயிரைக் கரைத்து-சுதந்திர
மழைவேண்டி-ஆத்ம வேள்வியில்
ஆகுதியுமானாய்.

-வல்வை கித்துள்.

## வழிகாட்டி

நல்லூர் வீதியில் மக்கள் வெள்ளம்
ஆறாக பாய்ந்த கண்ணீர் துளிகள்
இந்திய அரசின் மாயையை கிழித்த திலீபன்
தமிழீழ மக்களுக்கு தலைவனின் பாதை
காட்டிய வீரன்
போராளிகளின் மனம் கவர்ந்துநின்ற தோழன்
தமிழீழ நெஞ்சுகளில் குடிகொண்ட சரித்திர
நாயகன்.

- பூ. சுபாங்கி, யேர்மனி.

## உன் ஆத்மாவை அமைதி செய்ய....

சுதந்திரப் பயிருக்கு வித்திட்டு
சூழ்ந்த களையகற்ற
அகிம்சைத் தீயில் ஆகுதியானவனே-தமிழீழம்
காம்பொடு மொட்டாகிற்று-பொறுத்திரு
மலராக இன்னும் சொற்ப நாட்களே!
தமிழீழ மலரை பாதத்தில் அஞ்சலிக்க-
சுகந்தம், உன் ஆத்மாவை அமைதி செய்யும்.

-அமலா ஜெயந்தன்

## நீயா செத்தாய் திலி நீ எங்கே செத்தாய்?

நீயா செத்தாய் திலி நீயெங்கே செத்தாய்?
தீராத வாஞ்சையொடு திடமாக போர் செய்த
நீயா செத்தாய் திலி நீயெங்கே செத்தாய்?
ஓயாத பேச்சினொடு, உணர்வாகி நிலைக்கின்ற
வீராதி வீரனே தமிழ்க்குலத்தின் விடிவிளக்கே
போரொன்று செய்தாய் போரென்றா செய்தாய்
பேர்போன பாரதத்தின் பேச்சினையே அடங்கவைத்த
பார்போற்றும் பண்பாளா! பார்த்திபனே என்றும் வாழி!

- வெள்ளை அண்ணை

## தியாக சீலன்

அமைதிகாக்க வந்தவர்கள்
அரக்கருக்கு துணை நின்றார்
அறம்கொண்ட போர் தொடுத்து
ஐந்தம்சம் கோரிநின்றாய்
பன்னிரு நாளாக
பசிமறந்து நீயிருந்தாய்
இறுதி உயிர் உள்ளவரை
துளித்துளியாய் எமக்களித்தாய்!

- மலரவன், சுவிற்சலாந்து.

## தியாக தீபம்

பார் புகழும் பார்த்தீபா!
தேகம் மெலிந்தாலும்
தாகம் தணியாது-என்று
தேசத்தில் சாதித்த தியாக தீபமே!
உனது பாதையில்
ஆயிரம் மலர்கள்
உனது வீழ்ச்சியில்
ஆயிரம் எழுச்சிகள்!

-ஏ. சீ. பெரிசிற்றஸ், சுவிற்சலாந்து.

## தியாக தீபம் திலீபன்

உயிரை திரியாக்கி
உடலை மெழுகாக்கி
உன்னை நீயே
உருக்கிக் கொண்டாய்
உரிமை வேண்டி
உண்ணா நோன்பிருந்த
அண்ணல் காந்தியை
அகிம்சையில் வென்றாய்!

-குமுதா, யேர்மனி.

## இந்த முகம்

நல்லூர் வீதியிலே நான் கண்ட முகம்
நமக்காய் நீர்கூட அருந்தாது இருந்தமுகம்
நான் பள்ளிச்சிறுவனானபோது பார்த்தமுகம்
பார்விட்டு பத்தாண்டு சென்றது இந்தமுகம்
ஊரெழுவில் உதித்து வளர்ந்த முகம்
நல்லூர் வீதியிலே உதிர்ந்த முகம்
பாரிலுள்ள தமிழரெல்லாம் வீரஅஞ்சலி
செலுத்துவதைப் பார்த்திருக்கும் இந்தமுகம்!

-அ. றூபேட் (மணல்க்காடு), இத்தாலி.

## தாகம்

தாயகத்தின் தாகத்தில்-இவன்
தண்ணீரும் அருந்தவில்லை
கலங்கரை விளக்கொன்று
கரைந்து போனது-ஏன்
அன்னியன் புகுந்தான் அழிந்தது நீதி.
நீதி கேட்டிவன் துணிந்து நின்றான்
பாவியர் இவன் தாகம் தீர்க்கவில்லை
பறித்தனர் இனிய உயிரைத்தானே!

-தவராசா சித்திரா, யேர்மனி

## தாயகம் துடித்தது

அன்னம் தண்ணீர் ஏதுமின்றி
வேள்வி தொடுத்தான் திலீபன்
தாயக மண்ணில் நிலைகொண்டு
தன்னை இழந்தான் திலீபன்
அணுவணுவாய் அவன் உடல் சிறுக
தாயகம் துடித்தது
ஈழத்தாயில் அவன் தூங்க
எம் நெஞ்சங்கள் துடித்தது.

- எவ். பிறேமானந்தன், யேர்மனி.

## ஒப்பில்லா ஈகை

ஈழத்தின் விடிவுக்காய் இவன் தன்னுயிர்
ஈந்தான், திலீபன் தியாகியானான்.
ஈழத்து மக்கள் மனங்களில் ஓவியமானான்.
நல்லூர் வீதியில் திலீபன்
நமக்காய், காந்தி தேசத்திற்கெதிராய்
காந்திய வழியில் தன்னுயிர் துறந்தான்.

- ஊரான், இலண்டன்.

## ஆக்கங்கள் அனுப்பிய அனைவருக்கும் நன்றி:

யேர்மனி- சில்லையூரான், ரவி, அ. கணேசலிங்கம், சி. சத்தியகுமார், புஷ்பராணி ஜோர்ஜ், மு. சீதா, சு. ஜெகதீஸ்வரன், அகிலன் வரதராஜா, விக்கி, சீலன் இந்திரா, துன்னாலையூர் குகதாசன், அழகா, நித்திலா, திருமதி சிவகுமார், விளானூரான், சண்முகநாதன் பிரபாகர், செல்வி பொன்னுத்துரை சுபாசினி, செ. சதானந்தன், திருஷ்ஜா திருநாவுக்கரசு, தலைத்தீவான்.
இத்தாலி-செம்பியன்பற்று எ. டெமன்வோல்ட், ம. கெலன்டா, செல்வி, கிருபாலினி கிருபைராசா, மணற்காடு, ப. கிலாடின்லஸ்ரீன்.
லண்டன்-வைதேகி தம்பிராஜா, செல்வன் ச. மயூரன், ச. ஜனனி, அ. சிவானந்தராஜ், திருமதி வி. புஸ்பராணி.
பிரான்ஸ்- பாலா, அவுஸ்த்திரேலியா-வரதன் , நோர்வே-சிவராஜா விஜயரூபன் , குவைத்-பொன் மகன் மீனாட்சிதாசன், புங்கையூர் மதி, நா. பாமினி, காரை ந. சேகர், வேலணையூர் சிவா, இ. மோகனதாஸ், வி. ஏ. நிறாஜ், தமிழீழம். சுவிற்சலாந்து-ஊரைதீவு மோகன், த. இலங்கேசன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு போராளியின் இறுதி வரிகள்...

**மேஜர் நித்தியா இறுதியாக களத்திற்கு செல்லும் வேளையில் தான் மனதிலே தாங்கி வைத்திருந்த எண்ணக்கிடக்கைகளின் வரிவடிவம் கீழே தரப்பட்டுள்ளது.**

**அ**ன்புள்ள அம்மா அப்பா அன்பின் தம்பி தங்கைகள்.

என் இதயத்தில் தினமும் குடி புகுந்திருக்கும் அனைத்துள்ளங்களுக்கும் நான் எழுதும் அன்பு மடல். நான் நலம் உங்கள் சுகம் அறிய கோடி கோடி ஆசை. முடியவில்லை.

பெற்றோரே நான் உங்களிடம் கூற நினைப்பது யாதெனில் நாம் பிறந்த மண் இன்று கொடிய நரகாலிகளின் ஆட்சி வலையில் சிக்கித் தவிக்கிறது. அந்த கொடிய அரக்கனை அழிக்கும் காலம் எம்மிடம் வந்து விட்டது. வசதியாகவும் நோயின்றியும் இன்பத்துடன் வாழ்ந்த எம் குடும்பம் போன்று இன்று எத்தனை எத்தனை குடும்பங்கள் இருக்க இடமின்றி குடிக்க நீர் இன்றி நோய்க்கேற்ற மருந்தின்றி உணவின்றி தவிக்கின்றார்கள். இந்த நிலையில் தான் நீங்களும்..., இது எனக்கு நன்கு புரிகின்றது. ஆனால், இதில் இருந்து விடுபட இன்று எம் தலைவன் வழியில் நடைபெறும் போரில் நிச்சயம் உங்கள் இருப்பிடங்கள் உங்கள் கைகளுக்கு நிச்சயம் கிட்டும் நாள் மிக அருகில் வந்து விட்டது. இதை இட்டு மனதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள். இன்று நான் களம் செல்லுகிறேன். இதையிட்டு மனதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள். தவிர உறுதி இழக்காதீர்கள். காரணம் இச்சமர் பெரியது. இதில் நான் வெற்றியுடன் திரும்பலாம் அல்லது நித்தி வழி தொ–டரலாம். இதை எண்ணி அழாதீர்கள். ஏன் என்று யோசிக்கிறீர்களா? உங்கள் பிள்ளைகள் இன்று கோழைகளைப் போல் வீட்டு மூலைக்குள்ளும் வெளி நாட்டிலும் வாழ விரும்பவில்லை. நான் பிறந்த மண் அன்னியனிடம் அடக்குமுறைக்கு உள்ளாகப்படுதலை இந்த உள்ளம் ஏற்க மறுக்கின்றது. அந்த காரணத்தால் இன்று மன மகிழ்ச்சியுடன் களம் செல்கிறேன். நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

*அன்புடன்*
*மகள் நித்தியா*

**கப்டன் நித்தியின் சகோதரியே மேஜர் நித்தியா.**



**மேஜர். நித்தியா**
**வீரச்சாவு:- 09-07-97**

---

லெப்.கேணல் குமரப்பா , லெப்.கேணல் புலேந்திரன் உட்பட

## 12 போராளிகளின் பத்தாவது ஆண்டு நினைவுநாள்

**காலம் : 04 -10 - 1997**
**சனிக்கிழமை 17 : 00 மணிக்கு**

**இடம் :**
**Universitats Platz der Weiben Rose,**
**Scharnhorst Str. 100, 48143 Munster.**

***அமைதிவணக்கத்தைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும்.***

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் – யேர்மனிக்கிளை

---

## திலீபன் நினைவுக் கலைமலை



**காலம்**
**28 . 09 . 97**
**ஞாயிற்றுக்கிழமை**
**மாலை 6.00 மணி**

**இடம்**
**Rommenskole**
**Karen Platous v. 31,**
**0988 Oslo**

---

தமிழீழ விடுதலைப் புலிகளின் (பிரித்தானியக்கிளை)
கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும்

## எழுச்சி கானங்கள் 97



**இடம்**
BRENT TOWN HALL
FORTY LANE
WEMBLEY
MIDDX.

**காலம்**
**18 - 10 - 97**
**சனிக்கிழமை**
**மாலை 6.30 மணி**

**தொடர்புகட்கு: U.T.O 0171 - 403 4554, 0956 329 660, 0956 314 370**

---

## தியாகதீபத்திருநாள்



**காலம்**
**28 - 09 - 97**
**ஞாயிறு மாலை**
**4.30 மணி**

**இடம்**
**Teatro Orione**
**(Via Don orione no 5)**
ஒறியோனே அரங்கு
(பரதநாட்டியம் அரங்கேறிய மண்டபம்)

1997ம் ஆண்டு மாவீரர் வெற்றிக் கிண்ணங்களும், சுற்றுக் கேடயமும் இந்நாளில் வழங்கப்படும்.

திலீபன் கல்வி நிலையம், கலைபண்பாட்டுக் கழகம், இத்தாலி.

www.tamilarangam.net

# தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் பத்தாம் ஆண்டு நினைவாக....




## களத்துக்கு பூத்தவனே திலீபா !

திலீபா..
நீ செத்து விட்டதாக
எவன் சொன்னது?

எங்கள் குருதியில்
அணுக்களாய் சேர்ந்து
மூச்சுக்காற்றாய்
இன்றும் நீ வாழ்கிறாய்...

மரணத்தை அழைத்து
மடியினில் அமர்த்தி
கொஞ்சம் கொஞ்சமாய்
உன் உடலையே
தின்னக் கொடுத்தாய்!

உண்ணா விரதமென்பதின்
அர்த்தத்தை
காந்தியின் கல்லறைக்குமல்லவா
சொல்லிக்கொடுத்தாய்!

தமிழீழ தாகம் தீர்க்க
பசி வேள்வியி லொரு
யாகம் தொடங்கினாய்!

சுதந்திர சோலை யமைக்க
போர்க்களத்தில்
குருதிப் பூவா யல்லவா
விதையாக மாறினாய்!

ஆயுதப் படைகளை எதிர்த்து
பட்டினிப் போர்தொடங்கி
அகிம்சை அம்புகளை வீசினாய்!

இருட்டு மண்ணில்
வெளிச்சம் பிறக்க
உன் சிதைக்கு



நீயே யல்லவா
நெருப்பை மூட்டினாய்!

தமிழன் கோட்டையில்
புலிக்கொடி பறந்திட
யுத்த களத்தில்
நீயும் சாம்பலாய் உதிர்ந்தாய்!

மெழுகாய் உன்னை உருக்கி
தீப் பிழம்பா யல்லவா
எழுந்து வெடித்தாய்!

பட்டினி கிடந்து
பசியினை சுவைத்து
காற்றுக்கே
உணவாய் உயிரைக்கொடுத்தாய்!

ஈழம் பிறக்க
தாய் மண்ணுக்குள்
உன் உடலையல்லவா
கருவாய் புதைத்தாய்!

புலியாய் பிறந்து
வரலாற்று பக்கங்களில்
நீ வாழ்ந்ததாய் பொறித்தாய்!

சரித்திர சுவடுகளில்
புலிகளின்
துப்பாக்கிக் குண்டுகளாயல்லவா
இன்றும் நீ வாழ்கின்றாய்!

சுதந்திரக் காற்றை
சுவாசிக்க எண்ணி
வீரியப் புயலாய்
அன்று நீ மறைந்தாய்!

ஆயிரமாயிரம்
புலிகளையல்லவா
விருட்சமாய் இன்று நீ முகிழ்ந்தாய்!

பசியையே
பற்றவைத்து
அதில் தீயாய் நீயே எரிந்தாய்!

திலீபா
அன்றும் நீ வாழ்ந்தாய்

எங்கள்
குருதியிலும்
மூச்சிலும்
இன்றும் நீ வாழ்கிறாய்!

- வவுனியான், தமிழ்நாடு



T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.C., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-667-8463
Fax: 718-623-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-348 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 376, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 380 8224